# தஞ்சைப் பெரியகோயிலைக்

கட்டிய

# சித்தர் கருவூரார் கதை

★

ஆசிரியர்

குருமகா சன்னிதானம் சித்தர் கருவூரு
பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி

★

இந்து இலக்கியக் கழக வெளியீடு.

26

ஓம்

## பதிப்பகத்தாருக்கு பாராட்டு உரிமை உரை :

பன்னெடுங்காலமாக செவி வழிச் செய்திகளாகவும், கும்மிப் பாடல்களாகவும், தாலாட்டுப் பாடல்களாகவும், எழுதாக் கிளவிகளாகவும், மறைகளாகவும், சிதைந்த பல நூல்களில் உள்ள குறிப்புக்களாகவும், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி தொகுத்த நூல்களிலும், அவரும், அவரது மகன் கருவூர்த் தேவரும், பேரன் திருமாளிகைத் தேவரும் எழுதிட்ட நூற்றுக் கணக்கான நூல்களிலும், இவர்களது விந்து வழி வாரிசுகளும், குரு வழி வாரிசுகளும் எழுதிட்ட நூல்களும், குறிப்புகளும், கடந்த இருபதாண்டு கால இடைவெளியில் முறையாகவும், முழுமையாகவும், பயன்படுத்தப்பட்டுத் **" தஞ்சை பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரை கருவூரார் வரலாறு "** என்ற நூல் சுமார் ஆறாயிரம் பக்கங்களுக்கு மேல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலை என் தந்தை எழுதத் துவங்கி, நானும் எழுதி இவ்வளவு பெரிய நூல் அச்சுக்கு வரவில்லையே என்கின்ற காரணத்தினால், இன்னும் சில ஆயிரம் பக்கங்கள் எழுதினால்தான் இந்நூல் முழுமை-யடையும் என்ற நிலையில் முடிவுறாமல் இருக்கின்றது.

இந்நூலில் உள்ள குறிப்புக்கள் அனைத்தையும் யாரும் கண்மூடித்தனமாக நம்பவேண்டும், ஒப்புக்கொள்ள வேண்டும்......என்று எதிர்பார்க்கவில்லை நான். என்னுடைய நோக்கம் நடோடி கதைகளாக, பழம் பாடல்-களாக, ஏடுகளில் சிதைந்து கிடக்கும் செய்திகளாக, புராணங்களாக, சமயச் சார்புடைய மறைகளாக, வேதங்களாக......இருப்பவைகள் அனைத்தையும் உண்மையான வரலாற்றுக் கண்கொண்டு ஆராய்ச்சி செய்து, தமிழினத்தின் அருமை, பெருமைகளை விளக்கிடும் வரலாற்று நூல்கள் பல உருவாகிட வேண்டும் என்பது-தான். சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மிகப் பெரிய பேரரசாக விளங்கிட்ட பிற்காலச் சோழப் பேரரசின் (The Empire of the latter Cholas) வரலாற்று மூலங்களை ( Sources of History, Archealogical Evidences, Inscrip-tions, Etc. ) நம்ப முடியாத, ஒப்புக்கொள்ள முடியாத,

ஏற்றுக் கொள்ள முடியாத......கற்பனை நிலைகளை, கதை நிலைகளை அடைந்து விட்டன......என்கின்ற பொழுது பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய ஆதிமனிதன் தோன்றிய குமரிக் கண்டம் ( The lost Lemuria ), அங்கு நிலவிய இரு தமிழ்ச் சங்கங்கள்; அங்கு நிகழ்ந்திட்ட இரு பெரும் கடல் கோள்கள், வைகை ஆற்றங்கரையில் நிறுவப்பட்ட மூன்றாவது தமிழ்ச் சங்கம் அதனுடைய அழிவு; முக்சங்க கால அரசர்கள், கவிஞர்கள், இலக்கிய இலக்கணங்கள், அக்காலச் சமுதாய பண்பாட்டுக் கூறுகள், நாகரீகக் கூறுகள், அரசியல் நிலைகள், சமயச் சமுதாய நிலைகள், கல்வி நிலைகள், கலை நிலைகள்......, முதலியவைகளைப் பற்றிய வரலாற்று மூலங்கள் எவ்வளவுதான் தெளிவாக-வும், அறிவியலுக்கு ஏற்றதாகவும் எடுத்து உரைக்கப்-பட்டாலும் அவை கட்டுக் கதைகளாக, கற்பனைகளாக, புராணங்களாக, புலமையாளர்களின் பொய்யுரைகளாக... கருதப்படத்தான் நேரிடுமே தவிர உண்மையான வரலாற்று மூலங்களாக ஏற்றுக் கொள்ளவே படமாட்டாது. இப்படி ஓர் அவலை நிலை, இழி நிலை, கேவல நிலை, பழி நிலை தமிழினத்திற்கு மட்டுமே ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் வருந்தத் தக்கது. இதற்கெல்லாம் காரணம் தமிழர்களுக்கு வரலாற்றுத் துறையில் அக்கரையும். ஆர்வமும் இல்லா-திருப்பதுதான். அதுமட்டுமல்ல தமிழ் தெரிந்தவர்களில் பலருக்கு வரலாற்று அறிவும், வரலாற்றுக் கண்ணோட்டமும் இருப்பதில்லை. ( Historical Knowledge and Historical Attitude ). வரலாற்றுத் துறையில் வல்லுனர்களாக உள்ள பல தமிழர்களுக்கு, தமிழ் அறிவும் ( Knowledge in Tamil Language and Literature ), தமிழின வரலாறும் ( The History of the Tamil Race ); நிலவியல் அறிவும், (Geological and Geographical Knowledge), மானுடவியல் அறிவும் ( Knowledge in Anthropology )...... மிகுதியாக இல்லாமல் போய்விடுகிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக இந்த இருபதாம் நூற்றாண்டில் செயல்பட்டிடும் தமிழினச்



சமய சமுதாய அரசியல் தலைவர்கள் வரலாற்றின் முதன்மையையும் ( The Importance of the History ) வரலாற்றின் இன்றியமையாமையையும்(The Inevitability and the Essentiality of the History ), வரலாற்றின் பேராற்றலையும், பயனையும் ( The Great Power and the Usage of the History )...... முழுமையாக உணராததால் இன்னும் தமிழினத்திற்குரிய சமய, சமுதாய, அரசியல், இலக்கிய......வரலாறுகள் முறையாகவும், முழுமையாகவும் எழுதப்படவேயில்லை.

"எந்த ஓர் இனமும் தன்னுடைய முழுமையான வரலாற்றைத் தெரிந்து, அறிந்து, புரிந்து, தெளிந்து, நம்பி, ஒப்புக் கொண்டு அதன் பின்னணியில் செயல்படாமல் முழுமையான விழிச்சியோ, எழுச்சியோ, செழுச்சியோ... பெற்றிட்டதில்லை" என்ற ஓர் அரிய, பெரிய, சீரிய பேருண்மையை உணர்ந்து அதற்கேற்பக் காலக் கணக்கீட்டு முறையில் (With a Chronological Approach) தமிழர்களுடைய தொன்மைமிகு வரலாற்றினை எழுதி முடிக்காதவரை தமிழர்கள் விழிச்சி பெறுவது, எழுச்சி யுறுவது, கிளர்ச்சி செய்வது, வளர்ச்சி எய்துவது, செழுச்சியடைவது, மறுமலர்ச்சியில் திளைத்திடுவது நிகழ்ந்திடவே நிகழ்ந்திடாது. எனவேதான், இருட்டறைப் பொருள்களாக, புதையல்களாக, நிலவறைச் சொத்துக்-களாக...... இருக்கின்ற அனைத்தையும், தமிழினத்தின் பொதுவுடமைகளாக ஆக்கிடும் முழு முயற்சியில் ஈடுபட்டுள்ளேன் நான்.

ஆறாயிரம் பக்கங்களுக்கு மேல் எழுதியும் முழுமை-யுறாத மாபெரும் வரலாற்று நூலான 'தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரை கருவூரர்' அவர்களின் வரலாற்று நூலை ஆயிரம் பக்க அளவிலும், பல நூறு பக்க அளவிலும், சில நூறு பக்க அளவிலும், ஒரு நூறு பக்க அளவிலும்...... ஆகப் பல வரலாற்றுச் சுருக்க நூல்களாக எழுதி வெளியிட முயன்றும் தேவையான உதவி கிடைக்கவில்லை. இப்பொழுது உயர்திரு க. குருசாமி அவர்கள் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு வருகின்ற மக்களின் கருத்துக்களுக்கு

விருந்தாகவும், வேண்டுகோளாகவும் ' தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரை கருவூரரின் வரலாற்றுச் சுருக்கம்—முதல் நிலை ' என்ற நூலை சித்தர் பதிப்பக உரிமையாளர் வே. இராமராசு அவர்கள் மூலம் அச்சிட்டு வெளியிட முன்வந்துள்ளதற்கு மிக மிக நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலில் உள்ள செய்திகளையும் கருத்துக்களையும் பயன்படுத்துபவர்கள் ஆசிரியரின் அனுமதியை பெற்றே-யாக வேண்டும். இல்லையேல் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். பதினெண் சித்தர்-களுடைய நூல்கள் ' தமிழினப் பண்பாட்டுப் பாரம்பரியப் (The Cultural Heritage of the Tamils) பெருமைகளையும் உரிமைகளையும் மட்டும் விளக்குபவைகள் அல்ல. இவை திராவிடப் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், இந்தியப் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், கீழைய நாடுகளின் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், மனித இனத்தின் தொன்மை மிகு பண்பாட்டுப் பாரம்பரியங்களையும்...... மிக மிகத் தெளிவாகவும், நேரடியாகவும், முறையாகவும், முழுமையாகவும் விளக்குவன. அத்துடன், திராவிட மொழிகள் என்று சொல்லப்படுகின்ற, தென் இந்திய மொழிகளுக்கும், இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மொழிகளுக்கும், சீன மொழி, கிரேக்க மொழி, இலத்தின் மொழி, இப்புரு மொழி, பாரசீக மொழி...... முதலிய இன்னோரன்ன பிற தொன்மையான மொழிகளுக்கெல்லாம் 'எழுத்து வடிவத்தையும் ( Alphabetical Formations ) எண்ணற்ற சொற்களையும் ( Words ) வழங்கிய " மனித இனத்தின் முதல் மொழியான " ( The First Language of the Mankind ) தமிழ் மொழியின், உண்மையான, முறையான, முழுமையான மொழி வரலாறும் ( The History of the Language ), இலக்கிய வரலாறும் (The History of the Literature), பதினெண் சித்தர்களின் நூலில்தான் இருக்கின்றன என்பதையும் ஈண்டு குறித்துக்கொள்கிறேன்.

பல நூற்றுண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வந்த ஓலை சுவடிகள் சென்ற நூற்றுண்டின் இறுதியிலும், இந்த நூற்றுண்டிலும் முறையாக பாதுகாக்கப் படாமையால் செல்லரித்தும், நைந்தும், குப்பைகளாகியும், அழிந்ததோடு; தொடர்ந்து பாதுகாக்கின்ற ஆர்வமின்றி நெல் அடுப்பில் எரிந்தும், ஆடிப்பெருக்கு வெள்ளத்தில் மிதந்தும் அழிய நேரிட்டது. அதனால் நகலெடுக்கும் எளிமையையும், பாதுகாக்கும் வசதியையும் கருதி அரை நூற்றுண்டு காலமாகத் தாள்களில் எழுதித் தொகுக்கப்பட்டுள்ள நூல்களெல்லாம் எழுத்து மங்கியும், தாள் நைந்தும், காலத்தால் ஈரமுற்றும்...... அழிந்து வருகின்றன. இனி அவற்றிற்கு நகலெடுக்கும் முயற்சி எளிய ஒன்றல்ல. என்ற நிலையிலேயே அவற்றையெல்லாம் வெளியிட வேண்டுமென்ற எனது பெருமுயற்சிகளுக்கு அரசிட-மிருந்தோ, தமிழ் மொழி நலம் பேணும் அமைப்புக்களிட-மிருந்தோ, தனிப்பெரும் செல்வர்களிடமிருந்தோ......எந்த வித உதவியும் கிடைக்காத இந்தநேரத்தில் திரு. க.குருசாமி அவர்கள் தாமாக முன்வந்து பதினெண் சித்தர்களின் நூல்கள், வெளியுலகிற்கு அறிமுகமாகும் முதல் முயற்சியை மேற்கொண்டமைக்கு எல்லோரும், என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளார்கள் என்பதனை ஈண்டு தெரிவித்துக்கொள்கிறேன். ஆர்வம் உள்ளவர்கள் முன் வந்து தரக்கூடிய ஏந்துகளை களிப்போடு ஏற்கச் சித்தமாய் உள்ளேன் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஓம் திருச்சிற்றம்பலம்.

பொன்னேரி
10—1—80

அன்பு சித்தர்
ப. கிருட்டிணமூர்த்தி.

# உரிமையுரை

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரி-யாற்றங்கரைக் கருவூரூர் என்று வரலாற்றுச் சுருக்க நூல் பதினெண் சித்தர் பீடத்துக்கு உரியதாகும். பன்னெடுங்-காலமாக மறைகளாகவும் ( Unwritten ) இரகசியங்களா-கவும் ( Secrets ) வேதங்களாகவும் ( Sacred Versions ) எல்லோரும் புரிந்து கொள்ள முடியாத தத்துவங்களாகவும் ( Esoteric Doctrine ) சமயப் பேருண்மைகளாகவும் ( Religious truths ) தெய்வீகக் கொள்கைகளாகவும் ( Mystrical Principles ) இருந்திட்டவைகளை சான்று-களாகவும், ஊன்றுகளாகவும் கொண்டு எழுதப்பட்ட மிகப் பெரிய வரலாற்றுச் சுருக்கமே இந்நூல். எனவே ஆசிரியரின் அனுமதியின்றி இந்நூலின் கருத்துக்களை மறைமுகமாகவோ, நேரடியாகவோ பயன்படுத்தி வேறு நூல்கள் வெளியிடுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

பதினெண் சித்தர்கள் 1 சாத்திரம் 2 தோத்திரம் 3 நூல் 4 விதி 5 சூத்திரம் 6 படி 7 பாரம்பரியம் 8 மறை 9 முறை 10 நெறி 11 வேதம் 12 சட்டம் 13 கண்ணி 14 ஒழுகலாறு 15 ஆகமம் 16 மரபு 17 மாலை 18 பா 19 பாட்டு 20 செய்யுள் 21 கவி 22 வீச்சு 23 ஒச்சு 24 நடை 25 அலை 26 கதிர் 27 ஒளி 28 ஒலி [ ஞான ஒளி, ஒலி என்பவை முக்கியமானவை இவை போல் தவஒளி ஒலி, பூசை ஒளி ஒலி, மறை ஒளி ஒலி, முறை ஒளி ஒலி, நெறி ஒளி ஒலி, வேத ஒளி ஒலி, என்று பல நூல்கள் உள்ளன. ] 29 கட்டு 30 அருளுரை 31 ஊசி முறி [ஊறி முறி என்றொரு நூல்] 32 வாக்கு 33 குமுறல் 34 புலம்பல் 35 சிந்து 36 பரவல 37 எள்ளல் 38 ஏசெல் 39 கிடத்தல் [ பாடு கிடத்தல் ] 40 வேண்டல் 41 முத்திரை 42 நேமம் 43 நியமம் 44 நிடதம் 45 நீதி 46 அறம் 47 நோக்கு 48 போக்கு [ நேம நியம நிடத நீதி நால்வகை உயிர்ப்பு வேதமாம் என்ற சொற்றொடர் பல இடங்களில் வருகின்றது. இதில் ‘ உயிர்ப்பு ’ என்ற சொல் சில இடங்களில் ‘ உயிர்க்கு ’ என்று பாட வேறுபாடு உள்ளது. எனவே இது உயிரற்றவைகளுக்கு உயிர் கொடுக்கின்ற வேதமா?



( உயிர்ப்பு வேதம் ) அல்லது உயிர்கள் பிறவா நிலை இறவா நிலை முதலிய சித்திகளைப் பெறுவதற்கு உதவிடும் வேதமா ? ( உயிர்க்கு வேதம் ) என்று முடிவுக்கு வரமுடியவில்லை. ] [1] முதலிய பல பெயர்களில் உரை நடையிலும், செய்யுள் நடையிலும் பல புத்தகங்கள் எழுதியுள்ளார்கள். இவை மொழி நடையில் மட்டும் வேறுபட்டவை என்று சொல்ல முடியாது கூறுகின்ற கருத்துக்களின் அடிப்படையிலும் அவை பயன்படக் கூடிய தன்மையையும், காலத்தையும், அளவையையும் பொறுத்துத்தான் பிரிக்கப்பட்டுள்ளன. இத்தனை வகைப்-பட்ட புத்தகங்களையும் குறிப்பிட்ட கால வாழ் நாளுக்குள் அச்சேற்றி வெளியிடுவது என்பது இயலாத ஒன்றாக இருக்கும். இருப்பினும் இப்பேருண்மைகளை செய்தி-யளவிலாவது இவ்வுலக மக்கள் தெரிந்திருக்க வேண்டும் என்று விருப்பில்தான் இந்த உரிமையுரையில் இதனைக் குறிப்பிடுகின்றேன்.

---

[1] குறிப்பு :- நேம, நியம, நிடத, நீதி எனும் நான்கும் நான்கு துணை அமைப்புக்களைப் பெற்றுள்ளன. இதனை ஆதி நியமம், ஆதி நேமம், ஆதி நிடதம், ஆதி நீதி என்ற சொற்கள் பல இடங்களில் வருவதாலும் மூல நேமம், மூல நியமம், மூல நிடதம், மூல நீதி என்ற சொற்கள் வருவதாலும் அறிய முடிகின்றது. இதைக் குறிக்கப்படு-வதற்குக் காரணம் தமிழில் உள்ள ‘ நிடதம் ’ என்பதை அடிப்படையாகக் கொண்டு வடமொழியில் உப நிடதம் என்று எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. பதினெண் சித்தர்கள் நான்மறை, நான்முறை, நான்நெறி, நால்வேதம் என்று எழுதியிருப்பதையொட்டியே வியாசர் இந்த நான்கு உயிர்ப்பு வேதங்களை தொகுத்திருக்கலாம். ஏனெனில் உயிர்ப்பு வேதங்கள் என்பது பதினெண் சித்தர்களின் நூல்களில் இருக்கின்றன. அவற்றில் நான்கை ஒன்று சேர்த்து உயிர்ப்பு வேதம் என்று பெயரிட்டது “வியாசர்” ஆக இருக்கலாம்.அல்லது எனக்குக் கிடைக்காத ஏதேனும் ஒரு நூலில் பதினெண் சித்தர்கள் கூட நான்கு உயிர்ப்பு வேதங்கள் என எழுதியிருக்கலாம். இன்று வடமொழியிலுள்ள உபநிடத கருத்துகள் தமிழில் உள்ள நேமம், நியமம், நிடதம், நீதி ஆகியவற்றின் சாரமாகவே உள்ளன.

பதினெண் சித்தர்கள் விண்ணில் உள்ளவைகளில் மின்னுவதால் கண்ணில் படுகின்ற விண் மீன்கள் (Stars) ஒளியில்லாதவைகள் (Planets) ஆவி நிலையில் உள்ளவைகள் (ராசிகள்). எரிகின்ற நிலையில் உள்ளவை (பிண்டம்) முதலிய அனைத்தையும் பற்றி முழுமையாகவும், முறையாகவும் ஆராய்ச்சி செய்து வானியல் (Astronomy) நூல்கள் நிறைய எழுதியுள்ளனர். இவ்வுலகத்தின் துவக்கம், உயிரினத் துவக்கம், பயிரினத் துவக்கம், மானுட இனத் துவக்கம் முதலிய பல்வேறு பொருள் குறித்து பல புத்தகங்கள் எழுதியுள்ளனர். பதினெண் சித்தர்கள் மனிதன் வழிபடுவதற்குரியனவாகக் கருதிய சமாதி, உருவத்தார், அருவுருவத்தார், அமரர், வானவர், கந்தர்வர், கிம்புருடர், கணத்தார், இருடி, தேவர், தேவதை, தேவியர், பட்டவர், ஆண்டவர், தெய்வம், கடவுள், இறை எனப்படும் 48 வகைப்பட்டவர்களைப் பற்றியும் மிகத் தெளிவாகப் பல புத்தகங்கள் எழுதியுள்ளனர். இதுபோல வழிபாடு நிகழ்த்துவதற்குரிய இடங்களில் ஆயிரக் கணக்கான வகைகளை விளக்கியுள்ளார்கள்.

இவைபற்றிய செய்திகள் அனைத்தும் பதினெண் சித்தர் பீடத்துக்கே உரியவை. இவற்றோடு பலவகைப்பட்ட மருந்துகள் தயாரிக்கும் முறைகளும் அவைபற்றிய நூல்களும், பதினெண் சித்தர்கள் பெயரால் பல புத்தகங்களாக இருக்கின்றன என்பதால் அவையும் பதினெண் சித்தர் பீடத்துக்கே உரியவை என்றும் "உரிமை அறிவிப்பு" ( Declaration of Right ) செய்யப்படுகின்றது. இந்த உரிமையை மீறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இன்றைய பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் கருவூறாராகிய நான் இந்த உரிமையுரையை அச்சிட்டு வெளியிடுகின்றேன்.

# காலைச் செவ்வானம்

## நூல் முன்னுரை

**தமிழினப் பெருமக்களே !**

நம் இனத்தின் — கன்னித் தமிழினத்தின் தொன்மை மிகு வரலாறும், அரசியலும், சமயமும், பண்பாடும், நாகரிகமும், இலக்கியமும், கலையும், சமுதாயமும் பிறவும் காலக் கணக்கீட்டு முறைப்படி குறிக்கப்பட்டுள்ள எண்ணற்ற நூல்களைத் தொகுத்து வைத்திட்ட அரும்பெரும் பணியினை ஆற்றிட்ட 'பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் கருவூறார்' அவர்களை மீண்டும் நம் இனம் நினைவு கூர்ந்திட செய்யும் பணியினை மேற்கொண்டுள்ளேன் நான்.

பயிற்சிக்குரிய பதினெட்டாண்டுகளையும், முயற்சிக்குரிய பதினெட்டாண்டுகளையும் முறையே கழித்திட்ட நான் பதினெண் சித்தர் பீடத்துக்குரிய கடமைகளை ஆற்றத் துவங்கியுள்ளேன். ஆர்வமுள்ளவர்களின் ஆதரவு வேண்டுகின்றேன்.

நான் தனிப்பட்ட முறையில் சிந்தர் கருவூறாரின் 'இரசவாதம்' 'கடவுட் கலைகள்' 'தெய்வீகக் கலைகள்' 'பேய்க் கலைகள்' 'தந்திரக் கலைகள்' 'எந்திரக் கலைகள்' 'கூவ நூல்' 'மட நூல்' 'யானை நூல்' 'குதிரை நூல்' 'வாகடம் அல்லது மாட்டு நூல்' 'பறவை நூல்' 'சிற்ப நூல்' 'ஓவிய நூல்' 'கட்டிட நூல்' 'கனு நூல்' 'வான நூல்' 'யாக நூல்' 'வேள்வி நூல்' 'தவ நூல்' 'பூசை நூல்' 'மோக நூல்' 'போக நூல்' 'மலடு நீக்கு சாத்திரம்' 'கிழடு நீக்கு சாத்திரம்' 'கைரேகை சாத்திரம்' 'அங்கவியல் சாத்திரம்' 'பிறப்பியல் சாத்திரம்' 'வர்ம சாத்திரம்' 'உலோக வார்ப்புச் சாத்திரம்' 'குட்டுமுறுக்குச் சாத்திரம்' 'சித்த மருத்துவச் சாத்திரங்கள்[1]' 'சித்தர் மருத்துவ நூல்கள்[2]' 'முச்சங்க வரலாறு' 'இலக்கிய வரலாறு' 'பதினெண் சித்தர் பீட வரலாறு' 'தமிழின குரு குல வரலாறு'......முதலிய சில குறிப்பிட்ட நூல்களையே

உடனடியாக அச்சிட்டு வெளியிடப் பேராவல் கொண்டேன். ஆனால், போதிய ஆதரவும், வாய்ப்பும், வசதியும் கிடைக்கவில்லை. இருப்பினும், சித்தர் கருவூரார் தொகுத்த நூல்களும், படைத்த நூல்களும் வெளிவந்தால்தான், இந்திய வரலாறும், உலக வரலாறும் உண்மையுடைய வரலாறாகவும், முழுமையுடைய வரலாறாகவும் ஆகும் என்பதை இங்கு வெளியிட்டுக் கொள்கிறேன்.

மேலும் சித்தர் கருவூரார் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி அவர்கள் சமரச சன்மார்க்கத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர் என்பதற்குச் சான்றாக; தஞ்சைப் பெரிய கோயிலில் 'வெளிநாட்டு வேத சித்தர்களாகிய' சொராசித்தர் [3], கன்பூசியசு [4], தேவ குமாரன் ஏசா [5], ஆண்டவனின் திருத்தூதர் முகமது நபி [6]. ஆகிய நால்வர்களுக்கும்; உள்நாட்டு வேத சித்தர்களாகிய 'வால்மீகி' 'வியாசர்' 'வள்ளுவர்' 'திருமூலர்' ஆகிய நால்வருக்கும்; வெளிநாட்டு ஞான சித்தர்களான 'ஆப்ரகாம்' 'மோசியர்' ஆகிய இருவருக்கும் உள்நாட்டு ஞான சித்தர்களான மகாவீரர், கௌதம புத்தர் ஆகிய இருவருக்கும் சேர்த்துப் பன்னிரண்டு திருச்சன்னதிகள் அமைக்க வேண்டுமெனத் திட்டமிட்டார். ஆனால் பலரின் எதிர்ப்பால் தடைபட்டது.

---

1 காய கல்பம், அமுதம், நவநஞ்சுக் கல்பம், நவலோக கல்பம், நவரத்தினக் கல்பம், நஞ்சுமுறி, மரண மாற்று, உயிருறுதி, வயிற்றுறுதி, உடலுறுதி முதலிய மருந்துகள் பற்றிய நூல்கள்.

2 புற்று நோய், தொழு நோய், வாதம், எலும்பு முறிவு முதலிய நோய்கள் பற்றிய நூல்கள்.

3. Zoroaster. 4. Confucius.
5. Jesus christ. 6. Prophet Mohammed.



பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி அவர்கள் சமுதாயச் சீர்திருத்தமாகக் கூறும் பொழுது பெண்ணுரிமையாக மானுட வாழ்வின் அன்பு ஊற்றுக்கள் பெண்கள் "மானுட வாழ்வின் இன்பக் கனி மரத் தோட்டங்கள் பெண்கள்" அவர்களை "மென்மையோடும், உரிமையோடும், உண்மையோடும் நடத்தல் வேண்டும்." என்றும்; 'பதினெண் சித்தர்களில் முதல்வரான சிவபெருமான் தன் உடலில் பாதியைத் தன் மனைவிக்குக் கொடுத்ததாகக் கூறுவது; பெண்ணுக்கு எல்லாவற்றிலும் ஆணுக்குச் சமமாகச் சமஉரிமை கொடுக்க வேண்டும். என்ற கருத்தை விளக்குகின்ற தத்துவத்தின் அடிப்படையிலேயேயாகும்' என்று குறிப்பிடுகின்றார்.

**விதவை :**

"பெண், பிறப்பில் அழகு மிக்க உயிரினம். அவளுக்கு வலிந்து வாழ்க்கைச் சடங்குகளை ஏற்படுத்திவிட்டு, அவளை 'விதவை' என்று வெறுத்தொதுக்குவது தவறு. இறைவன் படைப்பில் எவ்விதக் குறையுமில்லாத பெண்ணை விதவை என்று குறைகூறி ஒதுக்குவது மடமை. ஆண் பலமுறை மணப்பதை போல் பெண்ணும் பலமுறை மணக்க உரிமையுண்டு. விதவை என்று கூறி இறைவனின் படைப்பைப் பயனற்றுப் பாழாய் போகும்படி செய்வது பைத்தியக்காரச் செயலேயாகும்" என்று கருவூரார் குறிக்கின்றார்.

உலக நன்மைக்காக சித்தர் மருத்துவம், சித்த மருத்துவம், என்ற இரண்டினையும் உலகம் உணரச் செய்ய வேண்டும் சித்தர் மருத்துவம் ஒரு குறிப்பிட்டச் சத்து உடம்பில் குறையும் போதும்; ஒரு குறிப்பிட்டச் சத்து உடம்பில் அதிகமாகும் போதும்; நோய் உண்டாகும் என்ற அடிப்படைக் கொள்கையைக் கொண்டு உருவாக்கப்பட்டது.

நோய்களின் பிறப்பு முறைகளைப் பற்றிக் கூறும் போது உயிர் நோய், உடல் நோய், சிந்தை நோய், மன நோய், ஊழ்வினை நோய், விதி நோய் என்று நோய்கள் ஆறு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. இவற்றினடிப்படையில் 'தீராத நோய்கள்' 'தீரும்நோய்கள்' என்று இருபெரும் பிரிவுகளாக நோய்களைப் பிரித்தே மருத்துவம் பார்க்கும் முறை வகுக்கப்பட்டுள்ளது. இது மூடநம்பிக்கை என்று முடிவெடுக்கப்படவில்லை.

எந்த ஓர் இனமும், மற்றோர் இனத்தை அடிமைப் படுத்திச் சுரண்டி வாழ்வதை மனித பண்புக்குரியதாகக் கருதமுடியாது. எந்த ஓர் இனமும் உழைக்காமல் ஏமாற்றியே சுகவாழ்வு வாழ்வதை மனித பண்புக்குரிய– தாகக் கருதமுடியாது. இதுபோல எந்த ஒரு மொழியும், மற்றொரு மொழியைத் தாழ்த்தி, ஆழ்த்தி, வீழ்த்தி உயர்வதை மனித நாகரீகத்துக்குரியதாகக் கருத முடியாது.

மதம் என்றால் மது, அபின் போன்ற மயக்கப் பொருள் என்பதாகக் கருதும் சிலரின் கருத்தும், திருத்தம் பெற்று அனைவரும் பகுத்தறிவுக்குரிய, விஞ்ஞானப் பூர்வமான ஆராய்ச்சிகளைச் செய்ய அழைக்கின்றோம். ஆர்வமுள்ளவர்களின் ஆதரவினைத் தேடுவதோடு இன்று விஞ்ஞானம் வளர்ந்து, கண்டறிந்து வரும் புதுமைகளை யெல்லாம், மதத் துறையில் பன்னெடுங் காலத்துக்கு முன்னதாகவே இறையருளால் உணர்ந்து அருளுரைகளாக வெளியிட்டுள்ளார்கள் மெய்ஞ்ஞானிகள். இவர்கள் 'ஞானப் பாடல்கள்' 'தத்துவப் பாடல்கள்' 'தத்துவ உரைகள்' 'அருட் புலம்பல்கள்' 'திருவாசகங்கள்' 'தேவாரங்கள்' 'அருட்பாக்கள்' 'பாசுரங்கள்' 'புராணங்கள்' 'இதிகாசங்கள்' 'காப்பியங்கள்' என்று பல வடிவங்களில் தாங்களுணர்ந்தவைகளை வெளியிட்டுச் சென்றுள்ளார்கள். எனவே இப்படிப் பல வடிவங்களில் உள்ளனவற்றின் அடிப்படைகளை, உயிர்ப்பிடிப்புகளை முடிந்த முடிவுகளை யெல்லாம் முறைப்படி ஆராய்ந்து ஒருங்கு திரட்டும் பணியின் மூலம் சமய வேற்றுமைகள், சாதிச் சண்டைகள் தீண்டாமைக் கொடுமைகள், ஆதிக்க வெறிகள், பேராசை பூசல்கள் முதலியவைகளுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று எண்ணியே செயல்பட்டு வருகின்றேன் நான். முடிவு இறைவனுடையது.

# வாழையடி வாழைகள்

## பதினெண் சித்தர்கள்

இம் மண்ணுலகில் பதினெண் சித்தர் பீடாதிபதி– களாக நாற்பத்தெட்டுப்பேர் தோன்றிடுவர். அதன்பிறகே இம்மண்ணுலகம் நிறைவையும், முடிவையும் எய்திடும்.

முதலில் பன்னிரெண்டு இராசிகளுக்குரிய கருவூரார்– களும், அடுத்து ஒன்பது கோள்களுக்குரிய கருவூரார்களும் இறுதியாக இருபத்தேழு விண்மீன்களுக்குரிய கருவூரார்– களும் ஆக நாற்பத்தெட்டுப்பேர் தோன்றி இம்மண்ணுலகை மண்டலமாக்கி மண்டலமுறச் செய்வர்.

| | |
|---|---|
| இராசிவட்டக் கருவூரார்கள் | 12 |
| * விண்மீன்வட்டக் கருவூரார்கள் | 27 |
| கோள்வட்டத்துக் கருவூரார்கள் | 9 |
| | 48 |

பதினெண் சித்தர் பீடாதிபதிகளில்
இராசி வட்டத்தார்கள்.

இராசி வட்டத்துக் கருவூரார் :

1. அனாதிக் கருவூரார்
2. ஆதிக் கருவூரார்
3. தொன்மதுரைக் கருவூரார்
4. தென்மதுரைக் கருவூரார்
5. குமரியாற்றங்கரைக் கருவூரார்
6. பஃறுளியாற்றங்கரைக் கருவூரார்
7. கபாடபுரத்துக் கருவூரார்
8. தாமிரபரணியாற்றங்கரைக் கருவூரார்
9. வைகையாற்றங்கரைக் கருவூரார்
10. அமராவதியாற்றங்கரைக் கருவூரார்
11. காவிரியாற்றங்கரைக் கருவூரார்
12. அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார் "சித்தர் கருவூரார்"

* மேலேயுள்ள வாசகத்தில் 'விண்மீன்' வட்டத்துக் கருவூரார் இறுதியில் தோன்றுவர் என்றும் கீழேயுள்ள பட்டியலில் கோள்வட்டத்துக் கருவூரார் இறுதியில் தோன்றுவர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இப்பாட வேறுபாடு பிறகாலத்தில் நகலெடுத்தவர்

மேலேயுள்ள பட்டியலில் உள்ளவர்களில் { 8, 9, 10, 11 } நான்கு பேர்களுடையகால ஆராய்ச்சியினை கி பி. 1040க்குப் பிறகு சித்தர் பரம்பரையில் தோன்றிய 'யாரோ' நிகழ்த்தியுள்ளார்கள்.

குரு பாரம்பரியத்தில் { 8, 9, 10 } மூன்று பீடாதிபதிகளின் காலவரையறை ஆரம்பத்திலேயே இருப்பதால், இவற்றைப் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியே ( கி. பி. 785 — 1040 ) குறித்திருக்கலாம். என்று கருத இடமுண்டு. இவரது காலத்தை இவர் மகன் '**கருவூர்த் தேவரோ**' [கி. பி. 1002—1182] அல்லது பேரன் '**திருமாளிகைத் தேவரோ**' (1041—1137) குறித்திருக்கலாம். இந்த ஆண்டு கணக்கு. கலியுகக் கணக்கிலும் வள்ளுவராண்டு கணக்கிலும் சாலிவாகன ஆண்டுக் கணக்கிலும் இருந்து வந்திருக்கின்றது. அதனைச் சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் வாழ்ந்த 'சித்தர் ஏளனம்பட்டியார்' எனப்படும் சித்தர் கருவூரார் வழிவந்த இராமசாமி பிள்ளை [1] ஆங்கிலேயர்க்குரிய கிறித்துவ ஆண்டு கணக்குக்கு மாற்றினார். இவர் 'வேற்றுமொழி ஆட்சியும் தமிழர் வீழ்ச்சியும்' அல்லது 'அர்ச்சனை மொழி தமிழ் மொழியே' அல்லது 'தமிழ் மொழியே பூசைமொழி' என்ற மூன்று தலைப்புக் கொடுத்து ஒரு நூல் உருவாக்கியுள்ளார். இந்நூல் பதினெண் சித்தர்களும், பதினெண் சித்தர் பீடாதிபதிகளும், பிறதமிழ்ப் புலவர்களும் காலம் காலமாகக் கூறிய கருத்துக்களின் ஒரு தொகுப்பேயாகும்.

**தாமிரபரணியாற்றங்கரைக் கருவூரார் :**

இவர் கி. மு. 10,171 முதல் 9,928 வரை வாழ்ந்தவர். அதாவது இவர் ஏறத்தாழ 244 ஆண்டுகள் வாழ்ந்தவர். இவர் கி.மு. 9,928 ஆம் ஆண்டில் வைகாசி மாதத்தில் முழு நிலவு நாளன்று, திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் "அருவுருவ சமாதி" பெற்று ஒளி வடிவிலும், ஒலிவடிவிலும் நிறைவுற்றார். அதனால் இன்றைக்கும் நெல்லையப்பர் ஆலயத்தில் இவர் சமாதி கூடிய இடத்தில் முழு நிலவு நாளில் தெய்வீக ஒலிகளையும், அமாவாசை நாளில் தெய்வீக ஒளியணுக்களைக் காணலாம்.

1 [கி. பி. 1825 - 1936] மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த நிலக்கோட்டை வட்டத்துக்குரிய 'கண்டப்ப கோட்டை' என்ற பகுதியில் வாழ்ந்தவர். மிகச் சிறந்த சிற்பி, கட்டிடக் கலைஞர், மருத்துவர்.



**வைகையாற்றங்கரைக் கருவூரார் :**

இவர் கி. மு. 8956 முதல் 8848 வரை வாழ்ந்தவர். அதாவது இவர் ஏறத்தாழ 109 ஆண்டுகள் வாழ்ந்தவர். இவர் கி.மு. 8848ஆம் ஆண்டில் பங்குனி மாத முழுநிலவில் "உருவசித்தி" பெற்று அனைவரும் காண உடலுடன் விண்ணுலகம் சென்றிட்டார். இவர் சித்தி பெற்ற இடத்தில் முழுநிலவு நாளிலும் அமாவாசை நாளிலும் எண்வகைச் சித்திகளையும் பெறுதற்குரிய அருள் வழங்கப்படுகிறது. ஞானமுற்றோர் [1] பிடரிக் கண்ணினால் ஞானம் பெற்றார்க்கு முக்காலத்தையும் காணும் ஞானக் கண் ஏற்படும். இது 'ஆக்கச் சத்தி'க்கு உரியது.

இதேபோல் நெற்றியில் புருவமையத்தில் கடவுள் நிலை பெற்றவர்களுக்கு ஞானக் கண் ஏற்படும். இது அழிவுச் சத்திக்கு உரியது.

(i) மனிதர்கள் தவங்களின் விடாமுயற்சியாலும், அரிய பயிற்சியாலும், நேரிய செயல்களாலும், படிப்படியாக உயர்ந்து கடவுள் நிலையை அடையலாம் என்பதே பதினெண் சித்தர்களின் தத்துவம்.

(ii) கடவுள் என்றொரு தனிப்பட்ட தலைவன் கிடையாது. அப்படியொருவனைக் கற்பனை செய்து கொண்டு அவனுக்குக் காலம் முழுவதும் அடிமையாக வாழ்ந்து நரகத்தினின்று தப்பித்துக் கொள்ள நினைப்பது மடமை.

(iii) ஒவ்வொரு மனிதனின் உயிரும் நூற்றைம்பதாயிரம் உயிரணுக்களின் தொகுதியால் உருவாகியது. இவ்வணுக்கள் ஒளி வடிவம் பெற்று அருவுருவ சித்தி பெறல், ஒலி வடிவம் பெற்று அருவுருவ சித்தி பெறல், ஒளி, ஒலி கலந்த வடிவம் பெற்று அருவுருவ சித்தி பெறல் என்ற முப்பெருவகை சித்தி நிலைகளைப் பெற்றுக் கடவுளாகின்றன.

(v) 'இறவாயாக்கை' பெறல், 'இறந்தவர் உயிர்த்தெழல்' 'உடம்பழிய உயிரழியா நிலை' பெறல் முதலிய சித்திகள் நாற்பத்தெட்டு வகையான வழிபாடு நிலையுடையாரை உருவாக்குகின்றன அதனால் பாவத்துக்கு அஞ்சிக் கெஞ்சியோ! புண்ணியத்துக்கு ஆசைப்பட்டு வேண்டியோ

1 தலையின் பின் பக்கத்தில்

பூசை, வேள்வி, தவம், ஒகம் முதலியவைகளைச் செய்யத் தேவையில்லை.

ஆகிய இந்நான்கு அருளுரைகளை இவர் பொன்னேட்டில் எழுதி வைத்துச் சென்றதாகப் பல சித்தர் நூல்கள் கூறுகின்றன. இது பற்றிப் பதினெண் சித்தர் பீடாதிபதியும் பல செய்திகளை வழங்கியுள்ளார்கள். அவைகளை மேற்கூறிய இருவரின் வாழ்க்கை வரலாற்றிலும் கால ஆராய்ச்சிலும் விரிவாகக் காணலாம்.

## அமராவதியாற்றங்கரைக் கருவூரார் :

இவர் கி. மு. 100 முதல் கி. பி. 150 வரை வாழ்ந்தவர். அதாவது இவர் ஏறத்தாழ 251 ஆண்டுகள் வாழ்ந்தவர். இவர் கி. பி. 150 ஆம் ஆண்டில் மாசி மாத முழு நிலவில் அமராவதியாற்றங்கரையிலுள்ள கரூர் பசுபதீசுவரர் ஆலயத்தில் 'அருவசித்தி' பெற்று அச்சிவாலயம் முழுதும் நிறைந்திட்டார். இவருக்கு அவ்வாலயத்தில் அருவச் சத்திப்பீடம் ஒன்றுள்ளது. இவர் கிறித்துவ மதத்தின் மூலவரின் [1] ஈசுவரன் அவர்களை ஒன்பதாவது வயதில் அவருடைய பெற்றோர்களிடமிருந்து பிரித்து அழைத்து வந்து தம்மோடு பதினெட்டாண்டுகள் தங்கவைத்து எல்லாச் சத்திகளும், சித்திகளும் பெறச் செய்து மீண்டும் அவரை அவருடைய பெற்றோர்களிடம் ஒப்படைத்தார். இவரது காலத்தில்தான் இமயமலையில் வாழ்ந்த 'பிராகிருத' மொழி பேசும் 'களப்பிறர்'கள் நிலத்தின் வழியாக படையெடுத்து வந்தும், கங்கை, கடலோடு கலக்கும் துறைமுகத்து வாழ்ந்த கடல் கொள்ளைக்காரர்களான 'பாலி மொழி' பேசும் களப்பிறர்கள் கடல் வழியாகப் படையெடுத்து வந்தும் மதுரை மாநகரினை அழித்தனர்.

அப்போது கோவலன் கொலையுண்ட நிகழ்ச்சியும் அன்னியப் படையெழுச்சிக்குப் பேருதவியாயின; என்றிப்படி பல வரலாற்றுச் செய்திகள் இவரால் குறிக்கப்படுகின்றன. இவரே சிதம்பரத்தில் உள்ள கூத்தப் பெருமான் சிலையை ஐம்பொன்னால் வார்த்தெடுத்ததாக ஒரு குறிப்பும் உள்ளது, இவர் தம் காலத்து வழக்கிலிருந்த எல்லா நூல்களையும் மூன்ருவது தமிழ்ச் சங்கத்தின் மூலம்

1 ஈசுவரன் ஈசன் ஈசா என்று திருந்தியது.



தொகுத்திடும் பணியைத் துவக்கிட்டார். அச்சங்கம் மதுரை எரிந்ததோடு சிதைந்ததால்; அச்சங்கத்திலிருந்த மதுரை கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனாரைக் கொண்டு கரந்த மலையில் தங்க வைத்துச் சங்க இலக்கியங்களைத் தொகுத்திட்டார். பிறகு பதினெண் சித்தர்களின் 1. அருளுரைகள் 2 அறிவுரைகள் 3. ஒழுக்கங்கள் 4 சாத்திறங்கள் 5. சூத்திறங்கள் 6 நீதிகள் 7 நூல்கள் 8 நெறிகள் 9. முறைகள் 10. வாக்குகள் 11. விதிகள் 12. வேதங்கள் ........ முதலியவற்றை யெல்லாம் கொடுத்து வகுத்துப்பட்டியலிட்டார். என்ற செய்திகள் இவரைப் பற்றிய நூல்களில் உள்ளன.

## காவிரியாற்றங்கரைக் கருவூரார்

இவர் கி. பி. 785- 040 வரை வாழ்ந்தவர். அதாவது இவர் ஏறத்தாழ 2 6 ஆண்டுகள் வாழ்ந்தவர். இவர் கி பி. 1040 ஆம் ஆண்டில் பங்குனி மாதம் முழு நிலவில் 'அருவுருவசித்தி' பெற்றுத் தஞ்சாவூர் பெரிய கோயிலில் உள்ள நிலவறைக்குள் தனது மனைவிகள் மூவருடன் சென்று மறைந்திட்டார். இவரே பிற்காலச்சோழ அரச பரம்பரையைத் தோற்றுவித்தவர் ....... இன்றைய திருச்சி மாவட்டம் கருரூக்குப் பன்னிரண்டுகல் தொலைவில் உள்ள முடிகணம்' எனப்படும் முடிகண்ட சோழபுரத்துக் காட்டில் கன்னியாகத் தவமிருந்த சித்தர் கருவூரார் பரம்பரையைச் சேர்ந்த 'சோழமாதேவி'யை அழைத்து வந்து கரூர்ப் பசுபதீசுவரர் ஆலயத்தில் பூசை செய்து கொண்டிருந்த சித்தர் காகபுசுண்டர் வழிவந்த காகுத்தன் [1] என்பவனுக்கு மணமுடித்து இருவருக்கும் பிறந்த ஆண் குழந்தையைச் சோழப் பேரரசின் வாரிசாக வளர்த்திட்டார். குழந்தையை ஈன்று கொடுத்ததும் தாய் 'சோழமாதேவி' கருவூரிலிருந்து 15 கல் தொலைவிலுள்ள இடத்தில் சமாது ஆனாள். அது 'சோழியாயி' கோயில் என்று அழைக்கப்படுகிறது தந்தை காகுத்தன் சோழ அரச பரம்பரைக்காகத் தன்னைப் [2] பலியாக்கிக் கொண்டான். என்ற

1 இவன் 'இராமன்' 'விசயன்' 'ஆதித்தன்' 'பராந்தகன்' முத்தன் (விசயாலயன்) .....
என்ற பல பெயர்களால் குறிக்கப்படுகின்ருன்.

2 'பலியாக்கிக் கொண்டான்'- என்ற சொற்ருெடரின் வரலாறு பலவாருகப் பிற் காலத்தில் விளக்கப்படுகின்றது. அச்செய்திகளை எமது 'தமிழரின் விழ்ச்சியும் எழுச்சியும்' 'தமிழரின் எழுச்சியும் விழுச்சியும்' 'பிற்காலச் சோழப் பேரரசின் வரலாறு 'சித்தர் கருவூரர் வரலாறு' 'தமிழர் சமய வரலாறு' தமிழர் அரசியல் வரலாறு' 'சித்தர் நெறி' 'சித்தர் நெறியே இன்றைய இந்து மதம்' முலியத நூல்களில் தெளிவாகக் காணலாம்.

குறிப்புகள் இவரது நூல்களிலும் இவருக்குப் பிற்பட்டார் நூல் களிலும் உள்ளன.

இவர் தன் காலத்தில் 'தஞ்சைப் பல்கலைக் கழகம்' ஒன்றை நிறுவினார் நிறுவிய அப்பல்கலைக்கழகத்தில் பயின்ற மாணவர்கள் வெளிநாட்டினரும் உள்நாட்டின் பலபாகத்தை யும் சேர்ந்தவர்கள். அங்கு அருட்கலைகள், மருததுவம், அறிவியல், கணிதம் ... யாவும் சிறப்பாகவும், தெளிவாகவும் கற்பிக்கப்பட்டு, கற்றுத் தேறிய மாணவர்களை நாடெங்கும் அனுப்பி கலைகளை வளர்த்தார்.

இவர் 'புத்த மதமும் சமணமதமும்' தமிழரின் இருகண் கள் என்றிப்படி பலகருத்துக்கள் நிறைய மொழிந்து இவ்விரு மதங்களையும் போற்றுகின்றார்.

இவர் தாம் தொகுத்த நூல்களையும், எழுதிய நூல்களையும் 'தாய்நாடு' 'சுள்ளர்நாடு' 'சீனர் நாடு' 'இலங்கை' முதலிய இடங்களிலுள்ள புத்த மடாலயங்களில் பாதுகாப்பாகச் சேர்த்து வைத்திட்டார்.

இவர் மகன கருவூர்த்தேவர் எழுதியவையும் பேரன் திருமாளிகைத தேவர் எழுதியவையும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டதோடு இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள புத்த, சமண இந்துக் கோயில்களில் நிலவறைகளில் பாதுகாக்கப்பட்டன.

விரிவஞ்சி இக்குறிப்புகளோடு நிறுத்திக் கொள்ளு கின்றேன். இவர் பற்றிப் பின்வந்தோர் எழுதிய பல நூல் களும் நான் எழுதிய பல நூல்களும்தேவையானச செய்திகளை நிறைய வழங்குகின்றன. எனது 'முதலாம் இராசராசனின் தற்கொலை' சோழப் பேரரசின் வீழ்ச்சி' தஞ்சை பெரிய கோயில்' கடவுள் கண்டு பிடிக்கப்பட வரலாறு 'உண்மையான சமயம்' 'இவ்வுலகின் பேரருளார்கள்' ....... முதலிய நூல்கள் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் பற்றிய செய்திகளைச் சிறப்பாக வழங்குகின்றன.

### அரசயோகி இராசிவட்ட நிறைவுடையார்
### 'சித்தர் கருவூரார்'

சிவபெருமானால் பதினெண் சித்தர் பீடாதிபதியாக்கப் பட்ட கருவூரார் 'ஆதிக் கருவூரார்'எனப் படுகிறார். அதனால



ஒவ்வொரு பதினெண் சித்தர் பீடாதிபதிக்கும் ஓர் அடை மொழியுள்ளது. இப்போது பன்னிரண்டாவது பீடாதிபதி யாகப் பட்டத்துக்கு வந்துள்ளவர் கருவூரார்க்கு மகள் வழி வாரிசாகவும் காக்கையர்க்கு மகன் வழி வாரிசாகவும் தோன்றியிருப்பதால் 'சித்தர் கருவூரார்' என்று குறிக்கப்படு கின்றார் அதாவது இவர் பதினெண் சித்தர்களின் விந்துவழி வாரிசுரிமை உடைய இரண்டு சித்தர்களுக்கும் வாரிசாக உள்ளவர் மேலும் இவர் இராசிவட்டத்துக் கருவூரார் களில் இறுதியாகத் தோன்றியுள்ளதால் 'இராசிவட்ட நிறைவு டையவார்' என்ற அடை மொழியையும் அரச யோகம் செய்து முடித்துள்ளதால் 'அரச யோகி' என்ற அடைமொழியையும் பெற்றுள்ளார்.

*With the best compliments from :*

**நியூ கிருஷ்ண பவன்**

**தெற்கு அலங்கம்,**

**தஞ்சாவூர்.**

**போன் : 138**

# சுடரின் ஒளிக்கோடுகள்

## காவிரியாற்றங்கரைக் கருவூரூரின் வரலாற்றுச் சுருக்கம்

பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமாக சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் பொதிய மலையிலுள்ள ஒரு குகையின் மூடப்பட்ட வாயில் வெடித்துச் சிதறியபின்; அதற்குள்ளிருந்து வெளிப்பட்டார். அக் குகைக்குள் பன்னெடுங்காலமாகச் 'சத்திலிங்கம்' 'சிவலிங்கம்' என்ற இரண்டையும் நாற்பத்தெட்டு இலிங்கங்களையும் வழி பட்டுக் கொண்டிருந்தார்.

திருவுள ஒப்புதலும், குருவாணையும் பெற்றுக் குகையை விட்டு வெளிப்போந்த இவர்; தனது குலத்துக்குரிய பாண்டியப் பேரரசையும், தனது உறவுமுறைச் சித்தரான காக்கையர் எனப்படும் காகப்புசுண்டரின் சூரிய குலத்துக் குரிய சோழப் பேரரசையும் மீண்டும் தோற்றுவிக்க முயன்றார். பாண்டிய அரசகுலம் இவரது நம்பிக்கையை இழந்து சாபத்திற்குள்ளாயிற்று. சோழ அரசகுலம் அமராவதி ஆற்றங்கரையில் உருவாயிற்று இதன். முதல் அரசன் கி. பி 785 இல் உருவாக்கப்பட்டபின் இந்தக் காலக் கணக்கையே இவருடைய காலக் கணக்காக இவரே குறிக் கின்றார். இவர் கி. பி. 785 முதல் கி. பி 1040 வரை வாழ்ந் திட்டார்.

இவர் தனக்கு வாரிசு ஏற்பட வேண்டுமென்பதற்காக எல்லா இனத்தினும். சாதியிலும் திருமணம் செய்து கொண் டார். அப்படித் திருமணம் செய்து கொண்ட பெண் மூன்று மாதத்துக்குள் கருத்தறிக்கவில்லையானால் அப்பெண்ணை மீண்டும் கன்னியாக்கி [1] அருள் வழங்கி அவளுக்கு உறவினர் உள்ள இடம் அல்லது அவள் விரும்பிய இடம் தேர்ந்தெடுத்து அருகிலுள்ள சிறந்த சத்திக் கோயிலில் சமாதியாகிற [2] காலம் வரை வாழ ஆணையிட்டு விடுவார். இதன்படி இவர் இருநூற்று நாற்பத்தி மூன்று திருமணங்கள் செய்திட்டார்.

1 யோனிவாய் மூடிப் பெண்மையுணர்வு பிறவா நிலைக்கு உரியவளாக்குதல்.

2 தவம், பூசை, …… முதலியவைகளில் முழுமை பெறும்வரை ; சத்தி, முத்து எனும் மூன்று நிலைகளிலும் முழுமை பெற்றிடும் காலம் வரை.



இவரது இருநூற்று நாற்பத்தி மூன்றாவது மனைவி பொன்னிறப்பாவை "தாய்லாந்து நாட்டு இளவரசி" இந்த பெண்ணிற்குப் பிறந்த மகனே 'கருவூர்த் தேவர்' இக்கருவூர்த் தேவர் கி. பி 1040 இல் முதலாம் இராசேந்திரனின் மகளை மணந்து பெற்றிட்ட மகனே திருமாளிகைத் தேவர்' இத் திருமாளிகைத் தேவருக்குப் பல வாரிசுகள் ஏற்பட்டிட்டனர் அவ்வாரிசுகள் பற்றி 'வமிசாவழி' 'சித்தர் பாரம்பரியம் என்ற நூல்களும் பிற நூல்களும் விளக்குகின்றன.

'குரு பாரம்பரியம்' என்ற நூலில் பதினெண் சித்தர் குழுவின் தலைவரான சிவபெருமான் முதல் திருமாளிகைத் தேவர் முடியப் பலரின் வரலாறுகள் குறிக்கப்படுகின்றன. 'மூவர் தோற்றம்' என்ற நூலில் 'காவிரியாற்றங் கரைக் கருவூரூர் இவர் மகன் 'கருவூர்த் தேவர்' பேரன் 'திரு மாளிகைத் தேவர்' ஆகிய மூவரின் வரலாறுகள் தெளி வாகக் குறிக்கப்பட்டுள்ளன இந்நூலில் முதலாம் இராசராச னின் தற்கொலையும், மூன்றாம் இராசேந்திரனின் தற்கொலை யும் மிகத் தெளிவாகக் குறிக்கப் பட்டுள்ளன. இந்நூல் [1] கி பி 1279க்குப் பிறகே எழுதப்பட்டது.

சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் ஏறத்தாழ (256) இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் வாழ்ந்திட்டார். இவர் ஒன்பது பிற்காலச் சோழர் குல மன்னர்களுக்குக் குலக் குருவாகவும்; அரசரில்லாக் காலங்களில் அரியாசனத்தில் அமர்ந்து அரசோச்சும் ஆட்சித் தலைவராகவும் வாழ்ந்திட்டார். தஞ்சைப் பெரிய கோயிலிலும்' நாட்டில் பல பகுதிகளிலும் 'சிறுபள்ளி' 'பெரும் பள்ளி' என்ற கல்விக் கூடங்களை நடத்திப் பல கலைகளையும் முறையாக வளர்த்திட்டார். இவருக்கும் முதலாம் இராராசனுக்கும் தமிழர்-தமிழர் எதிரி உறவு முறைபற்றிக் கருத்து மாறுபாடு முற்றியதால் கி. பி 1040 இல் பங்குனி மாதம் முழு நிலவு நாளன்று தஞ்சைப் பெரிய கோயிலில் தானமைத்த நிலவறைக்குள் சென்று மறைந் திட்டார். அப்போது தாய்லாந்து நாட்டு இளவரசியும் பல்லவ குலத்து இளவரசிகள் [2] இருவரும் நிலவறைக்குள் சென்றிட்டனர்.

1 மூன்றாம் இராசேந்திரனின் தற்கொலை கி. பி 1279 இல் நடை பெற்றது என்பதால்....

2 இவர்களிருவரும் இவரால் திருமணம் செய்யப் பட்டுக் கருவுறாமல் மீண்டும் கன்னியாக்கப்பட்டவர்கள். இவருக்கு தொண்டுழியம் செய்து கொண்டு 'கருப்பழகி' என்னும் காளி கோயிலிலும், பெரிய உடையார் கோயில் சுற்றுப்பாதையில் உள்ள வராகி' கோயிலிலும் பூசை செய்து வந்தார்கள்.

**இலக்கியப்பணி :**

இவர் தமக்கு முன்பு வாழ்ந்து இன்றைய திருச்சி மாவட்டத்தில் உள்ள கருவூரில் உள்ள பசுபதீசுவரர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் 'சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார்' தொகுத்தும் எழுதியும் சேர்த்து வைத்திட்ட நூல்கள் பெருமளவில் சிதைவுற்றிட்டதால்; தம் காலத்தில் கிடைத்திட்ட நூல்களில் பெருமளவு சிதைவுற்றிருந்ததால். கிடைத்த நூல்களை யெல்லாம் திரட்டித் தொகுத்திட்டார். அப்படித் தொகுந்தவை 1877 நூல்கள்.

இவர், சிதைந்த பழம் பெரும் நூல்களையும் தமது ஆராய்ச்சி அநுபவ முடிவுகளையும் கொண்டு எழுதிய நூல்கள் முன்னூறுக்கு மேல் முழுமையாகக் கிடைத்துள்ளன. அவற்றுள்

(i) குரு பாரம் பரியம்:

ஆதிப் பதினெண் சித்தர்கள் முதல் இவரது பேரன்வரை அனைவரின் வரலாறுகளும் கூறுவது.

(ii) அரச பாரம்பரியம் :-

இவ்வுலகில் முதன்முதற் தோன்றிய அரசன் முதல் இவரது மகன் காலத்திய (கி. பி 1182) அரசன் வரை அனைவரின் வரலாறுகளும் கூறுவது.

(iii) குரு வாசகம் :-

இது திருவாசகத்துக்கு இணையாக எழுதப்பட்டது. உரை நடையில் அமைந்துள்ளது இவர் "திரு வாசகமும் குருவாசகமும் தமிழரின் கண்களாக, கைகளாக, கால்களாகச் செயல்பட்டால் தான் தமிழினம் உய்வு பெறும் ........" என்று குறிக்கின்றார்.

(iv) முச்சங்க வரலாறு (v) சமய வரலாறு (vi) சித்தர் நெறி .... ...... முதலிய நூல்கள்.

**சமயப்பணி :-**

"உலகில் தோன்றிடும் எல்லாச் சமயங்களும் சித்தர் நெறி எனும் ஆற்றின் இருமருங்கும் தோன்றும் கனிமலர்ச் சோலைகளே ..........." என்று குறிக்கின்றார். இவர் கன்பூசியசு, சொராசிட்டர், மகா வீரர், புத்தர், இயேசு, முகம்மது நபி நாயன் மார்கள், ஆழ்வார்கள் ......... பிறந்து வாழ்ந்து மறைந்த இடங்களுக் கெல்லாம் நேரில் சென்று மரியாதை செலுத்தியவர்; தான் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலில் மேலே குறிப்பிட்ட அனைவருக்கும் தனித்தனிக் கருவறைகள் அமைத்துப் பூசையும், திருவிழாவும் கொண்டாடத் திட்டமிட்டவர்.



இவர் இராசராசனைக் கொண்டு புத்த மதத்துக்கும்; அவரது தமக்கை குந்தவி தேவியைக் கொண்டு சமண மதத்துக்கும் பல ஆக்கப் பணிகளைச் செய்திட்டார். இவரால் அனுப்பப்பட்ட சிற்பிகள் மகாவீரர் பிறந்த மண்ணில் மகா வீரருக்குக் கோயில் கட்டினார்கள்.

இவரது காலத்தில் வைணவ சமய இலக்கியங்களுக்கும் முக்யத்துவம் தரப்பட்டு யாவும் தொகுக்கப்பட்டன. அச் செயலை இவர் பெரிதும், பாராட்டியதோடு; பன்னிரண்டு ஆழ்வார்களுக்கும் உலோகச் சிலை வார்த்துக் கொடுத்தார். இவரது முயற்சியாலேயே சைவ சமய இலக்கியங்களும் தொகுக்கப் பட்டன.

இவரே, கவிச்சக்ரவர்த்தி கம்பரைக் கொண்டு இராமாயணம் இயற்றும் படியும், பெருந் தேவனாரைக் கொண்டு மகா பாரதம் இயற்றும் படியும் செய்திட்டார். இவர் 'பூசா விதிகள்' 'பூசை மொழி', 'குருமார் ஒழுக்கம்' 'மூலவர் உருவேற்றுமை' 'குடமுழுக்கு நூல்' 'மந்திர சாத்திரம்' 'எந்திர சாத்திரம்' 'தவநூல்' 'வேள்வி நூல்' 'பிறவாமை பெறல்' 'இறவாயாக்கை பெறல்' ....... முதலிய நூல்களை எழுதிச் சமய மறுமலர்ச்சிக்கும் செழுச்சிக்கும் பாடுபட்டிட்டார்.

இவரே ஐம்பொன் உலோகக் கலவை, தங்கம், வெள்ளி ....... முதலியவற்றால் எழுந்தருளி சிலைகளை வார்த்தும்; கற்சிலைகளைச் செதுக்கியும், செதுக்கியும், சமயத் துறையில் புத்துணர்வை ஊட்டினர்.

இவர் தஞ்சைப் பெரிய கோயிலைச் 'சத்திலிங்க'த்துக் காகக் கட்டி முடித்தார்; கங்கை கொண்ட சோழபுரக் கோயிலைச் 'சிவலிங்க'த்துக்காகக் கட்ட ஆரம்பித்தார். நாற்பத்தெட்டு 'இலிங்கங்களுக்குரிய' கருவறைகளை நாடெங்கும் அலைந்து திரிந்து அமைத்திட்டார்.

## மருத்துவப்பணி :-

பதினெண் சித்தர்கள் தோற்றுவித்த மருத்துவத்துறை 'சித்தர் மருத்துவம்' 'சித்த மருத்துவம்' என்ற இருபெரும் பிரிவுகளையுடையது என்பதைத் தெளிவாக விளக்கித் தனித் தனி நூல்கள் எழுதியுள்ளார்.

நோய்களில் 'உயிர்நோய்' உடல் நோய்' என்று இரு பெரும் பிரிவுகள் உண்டு என்பதையும்; அவற்றுற்குரிய மருந்துகளையும், மருத்துவ முறைகளையும் தெளிவாக விளக்க நூல்கள் எழுதியுள்ளார்.

பதினெண் சித்தர் மருத்துவமுறையில் மணி [1] மந்திரம் [2] மருந்து என்ற மூன்றின் மூலமும் நோய் நீக்கம் முழுமையாகச் செய்யப்படுவது பற்றி பல நூல்கள் எழுதியுள்ளார்.

இவர் 'தொழு நோய்' இளைப்பு மாந்தம்' 'இறப்பு இருமல்'. 'அரச பிளவை' 'நீரிழிவு' 'நஞ்சு முறி' மூலச்சூடு' 'வெப்பு அகற்றல்' 'வலிமை வழங்கல்' ...... முதலியவற்றிற்கு மருந்து தயாரிக்கும் முறைகளை வெளிபபடையாகத் தெளிவாக விளக்கிப் பலநூல்கள் எழுதியுள்ளார்.

இவர் நோய்களில் 'பரம்பரையாக வரக்கூடியவை' 'குறிப்பட்ட தொழிலைச் செய்பவர்க்கு வரக்கூடியவை, 'உணவால் வரக்கூடியவை' 'உடலுறவால் வரக்கூடியவை' 'இயற்கையின் வெட்ப தட்ப மாற்றங்களால் வரக்கூடியவை' 'பூச்சுக்கடியால் வரக்கூடியவை' 'கோபதாப உணர்வுகளால் வரக்கூடியவை' ... என்று பல வகைகளைக் குறிப்பிடுவது தமிழின மருத்துவ※ [3]அறிவுக்குச் சிறப்பினைத் தருகின்றன்.

## அரசியல் பணி :-

இவர் நவரத்தினங்களால் செய்யப்பட்ட மணிமுடி அணிந்திருந்தார் அரசர்கள் போரை முன்னிட்டும், திருவிழாவை,

= Ligntrays - ஒளிக் கற்றைகள். Infra cosmic rays, Supra cosmic rays, Infra-red rays, ultra-vislet rays.

Sound waves-ஒலி அலைகள்; Differert musical nodes.

※ இவைபற்றி பலவிரிவான செய்திகள் " இயலாமையும் ஊக் முகோளாறும்" என்ற எமது நூலில் காணலாம்.



முன்னிட்டும் பிறகாரணங்களை முன்னிட்டும் தலைநகரைவிட்டு வெளியே சென்றிடும் போது இவரே அரியாசனத்தில் அமர்ந்து ஆட்சிப் பொறுப்புக்களை கவனித்திட்டார்.

'தமிழ் மொழியின் தாழ்ச்சியே தமிழின வீழ்ச்சி' என்ற கருத்தையே அரசியல் கொள்கையாக கொண்டிட்டார்,

"வேற்று மொழி ஆட்சியும் தமிழின வீழ்ச்சியும்" என்ற தலைப்பில் இவர் தமது அரசியல் நூல்களில் கூறிய கருத்து நாளடைவில் ஒரு தனி நூலாகவே மலர்ந்துள்ளது. 'சித்தர் ஒளம்பட்டியார்' என்பவர் இத்தலைப்பில் ஒரு நூல் எழுதியுள்ளார்.

இவர் 'அரசியல் விதி' 'அரசியல் ஒழுங்கு' 'வரி வசூலிப்பு' 'வரி விலக்கு' 'அரசும் வணிகமும்' 'அரசும் நிலாக்கிழார்களும்' 'அரசும் படை ஒழுங்கும்' 'படை நடத்தல்' 'போர் முறை' 'போர்க்கள அணி வகுப்பு' 'அரசும் கலைகளும்' 'அரசும் அன்னியரும்' அரசும் சமயமும்' 'அரசநீதி' 'அரசும் போர்க் கைதிகளும்' 'அரசும் அம்பலங்களும்' ...... முதலிய பலநூல்களையும் எழுதித் தமிழினத்தின் அரசியலறிவின் உயர்வை விளக்கியுள்ளார்.

## கலைப்பணி :-

இவர் சிற்பக்கலைக்கு மிகுந்த முதன்மை கொடுத்திட்டார் பல கோயில்கள், அரண்மனைகள், மாளிகைகள் கட்டுவதன் மூலம் கட்டிடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் பேராதரவு நல்கினர். இவர் தன் காலத்து வாழ்ந்த ஒன்பது சோழ மன்னர்களின் சிலைகளையும் கருங்கல்லில் செதுக்கியுள்ளார். தான் மணந்த இரு பல்லவ இளவரசிகளின் சிலைகளைச் செதுக்கியுள்ளார். காவிரிக் கரையில் உள்ள சீனிவாச நல்லூர்க் கோயில் இவர் செதுக்கிய சிற்பங்களைக் கொண்டது. கருங்கல்லில் சிலைகள் செதுக்குவது, உலோகச் சிலைகளை வார்ப்பது மண் பொம்மைகள் செய்வது.[1] பற்றி நூல்கள் எழுதியுள்ளார்.

1 இவர் காலத்தில் செய்யப்பட்ட பல ஐயனார் கோவில் குதிரைப் பொம்மைகளும், யானைப் பொம்மைகளும் முனீசுவரர் பொம்மைகளும், கிராம தேவதை சிலைகளையும் இயற்கையின் வன்கரங்களை எதிர்த்தும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

இவர் சிறந்த ஓவிய நூல்கள் எழுதியுள்ளார். சோழர் காலக் கோயில்களில் இவர் தீட்டிய ஓவியங்கள் இன்றுவரை நின்றுவரை நிலவுகின்றன.

இவர் இசைக் கருவிகள் பற்றியும், பாட்டின் பண்கள் பற்றியும், பாடுவோரின் இலக்கணம் பற்றியும் நூல்கள் எழுதியுள்ளார். ஆடற்கலைப் பற்றிப் பல நுணுக்கமான விளக்கங்களடங்கிய நூல்கள் எழுதியுள்ளார். 'சிறப்பாகப் பல வெளிநாட்டு இசைக் கருவிகள், ஆடல் வகைகள், மலை நாட்டு மக்களின் பாடல், ஆடல் கடல் வாழ் மக்களின் ஆடல், பாடல் ....... முதலியவை பற்றி இவர் எழுதியுள்ளவை வியக்கத்தக்கவை.

## அறிவியல் தொண்டு :-

இவர் தலைசிறந்த சிந்தனையாளர், எதையும் நடு நிலையிலி' ருந்த ஆராயும் பகுத்தறிவாளர். தன் வாழ்நாளில் எந்த ஒரு நொடிப் பொழுதையும் வீணாக்காமல் படிப்பிலேயே செலவிட்டிட்ட பெரிய படிப்பாளி; உலகை பலமுறை சுற்றிப் பார்த்திட்டவர்; பல சமயங்களையும் ஆராய்ந்து சமயப் பொறைமையும், பொதுமையும் உள்ளத்தே வளர்த்துக் கொண்டவர்;' தனது மொழி, இனம், நாடு என்ற பற்றுமிக்கவர்; இவர் எழுதியுள்ள 'கறை நூல்' 'பல்லி சாத்திரம்' 'விரிச்சி' 'தொடுகுறி சாத்திரம்' 'சகுண நூல்' 'இரசவாதம்' 'கூடு விட்டு கூடுபாய்தல்' உருவ மாற்றம்' 'வசியம்' 'மாரணம்' 'மாறகம்' 'உயிர்மூலிகை' 'ககனப் பயணம்' 'உடல் சித்தியும் பொருட் சித்தியும்' 'உயிர்ச் சித்தியும் ஞான சித்தியும்' 'முத்தி வழிகள்' கருவறை காணல்' ...... முதலியவை. இவர் புதுமை விரும்பி, புரட்சிச் சிந்தனையாளர், சீர்திருத்தச் செம்மல், பகுத்தறிவுப் பகலவன்' 'அறியாமை இருளகற்றும் ஆதவன், சிறந்த வரலாற்றுப் பேராசிரியர்' 'புதிய அரசியல் தத்துவங்களை உருவாக்கிய அரசியல்வாதி'; 'தீவிரமான சமுதாய சீர்திருத்தவாதி'; 'சமயத்தின் பெயரால் உள்ள மடமைகளைச் சாடிடும் துணிவுமிக்க புதுமைவாதி'; 'போர்க் கலைகளில் திறமையும் உடல் வலிமையும் மிக்க மாவீரர்' 'பல்கலைகளிலும் தேர்ச்சி பெற்றிட்ட மாமேதை'; 'மருத்துவத் துறையில் தன்னிகரில்லாது சிறந்து விளங்கிய மருத்துவ



மேதை'; 'பள்ளிக் கூடங்களும் ஆராய்ச்சிக் கூடங்களும்; பயிற்சிச் சாலைகளும் நிறுவிட்ட சிறந்த கல்வித் துறை; வல்லாளர்' குறிப்பிட்ட எண்ணிக்கைக் குரியவர்களிடம் செல்வம் குவிக்கப் படுவதை எதிர்த்த பொதுவுமைவாதி' தனியொரு மனிதன் நாட்டை ஆளுவதன் மூலம்தான் ஏழை, பணக்காரன், என்றும் ஏமாளி ஏமாற்றுக்காரன் என்றும் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்றும் ....... சமுதாயத்தில் உள்ள வேற்றுமைகளை யெல்லாம் அழித்தொழிக்க முடியுமென்ற சர்வாதிகார அரசியல் சித்தாந்தத்தை வலியுறுத்திய அரசியல் மாமேதை ...... —'

என்று கூவிய வண்ணம் அவரின் புகழ்பாடலாம். அவரின் படைப்புகளின் கால உண்மை அவரின் சீரிய பணிகள் யாவும் இங்கு கதிரொளியை சிறிய பரப்பில் பிடிப்பது போல்வதாகும்.

எனவே இவரின் 'வரலாற்றுச் சுருக்கம்' மேலே கண்டோம்; இவரின் எண்ணற்ற பணிகளினை மேலும் காண்போம்!

# "கோபுரத்தின் மடியிலே .... !"

## சோழப் பரம்பரை

பிற்காலச் சோழப் பரம்பரையை உருவாக்கி உருவம் தீட்டித் தந்த உலக அறிஞரான காவிரியாற்றங்கரைக் கருவூராரின் நூல்களின் மூலமும் அவரது மகன் பேரன் ஆகியோர்களின் நூல் ஆதாரவடிவிலும் காலநிலை விளக்கத்தோடு ஈண்டு தருகிறோம்.

சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி அவர்களின் காலம் —————— கி. பி 785-1040

இவரது மகன் கருவூர்த் தேவரின் காலம் கி. பி 1002-1182

இவரது பேரன் திருமாளிகைத் தேவரின் காலம் } கி. பி 1041-1137

| | | |
|---|---|---|
| 1 | முதலாம் விசயாலயன் | —————— கி. பி 785-893 |
| 2 | பரகேசரி விசயாலயன் | —————— கி. பி 846-881 |
| 3 | முதலாம் ஆதித்தன் | —————— கி. பி 871-907 |
| 4 | [1] முதலாம் பராந்தகன் | —————— கி. பி 907-953 |
| 5 | கண்டராதித்தர் | —————— கி. பி 950-957 |
| 6 | அரிஞ்சயன் | —————— கி. பி 957-958 |
| 7 | [2] இரண்டாம் பராந்தகன் (சுந்தர சோழன்) | } —————— கி. பி 957-970 |
| 8 | உத்தம சோழன் | —————— கி. பி 970-985 |
| 9 | முதலாம் இராசராசன் | —————— கி. பி 985-1040 |

## கருவூர்த் தேவர் காலத்து மன்னர்கள் :-

| | | |
|---|---|---|
| 10 | முதலாம் இராசேந்திரன் | —————— கி. பி 1012-1044 |
| 11 | முதலாம் இராசாதிராசா | —————— கி பி 1018-1054 |

1 இவராது இரண்டாவது மகனால் வெற்றி கொள்ள பட்டார்.

2 இவரது மகன் ஆதித்ய கரிகாலன் கொலை செய்யப்படுகிறான் எனவே இரண்டாம் பராந்தகன் அதிர்ச்சியினால் இறக்கிறான் அதனால் கண்டாரதித்தரின் மகன் உத்தமசோழன் இவரைத்தொடர்ந்து பதவியில் அமருகிறான்.



| | | |
|---|---|---|
| 12 | இரண்டாம் இராசேந்திரன் | —————— கி பி 1054-1063 |
| 13 | வீர இராசேந்திரன் | —————— கி. பி 1063-1070 |
| 14 | முதலாம் குலோத்துங்கன் | —————— கி. பி 1070-1120 |
| 15 | விக்கிரம சோழன் | —————— கி. பி 1118.1136 |
| 16 | இரண்டாம் குலேத்துங்கன் | —————— கி. பி 1113-1150 |
| 17 | இரண்டாம் இராசராசன் | —————— கி. பி 1146-1163 |
| 18 | இரண்டாம் இராசாதிராசா | —————— கி. பி 1163-1178 |
| 19 | மூன்றாம் குலோத்துங்கன் | —————— கி. பி 1178-1218 |
| 20 | மூன்றாம் இராசராசன் | —————— கி பி 1216-1256 |
| 21 | மூன்றாம் இராசேந்திரன் | —————— கி பி 1246-1279 |

முதலாம் விசயாலயன் காலம் கி. பி 785 முதல் 893 வரை என்று குரு பாரம்பரியத்தில் குறிக்கப்படுகிறது. 'அரச பாரம்பரியம்' என்ற நூலில் 'பரகேசரி விசயாலயன்' காலம் கி. பி 846-881 என்று குறிக்கப்படுகின்றது.

முதலாம் விசயாலயன் 108 ஆண்டுகள் வாழ்ந்தான் என்றார் குறிப்புள்ளதால் பரகேசுவரி விசயாலயன் இவனுடைய மகனாக இருக்கலாம்.

இந்த ஓர் ஐயப்பாடு நீங்கலாக பிற்காலச் சோழப் பேரரசர்களின் பட்டியலில் ஓர் ஐயப்பாடு ஏதுமில்லை. குரு மகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் : பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி அவர்களின் காலத்தே இராசராசனுடன் ஒன்பதுபேர் அரியணையில் ஏறினர்.

மூன்றாம் இராசராசன் மிகவும் திறமையற்றவராக விளங்கினார். தீய பழக்கமுள்ளவராக, பகற் கனவு காணும் நபராக இலங்கியமையால் அவரது பேரரசில் உள்ளும், புறமும் ஆக இருவிடத்தே தோன்றிய கலகங்களைத் தடுக்கவோ அடக்கவோ இயலவில்லை.

மூன்றாம் இராசேந்திரன் (1246-1279) பிற்காலச் சோழர்களின் கடைசி மன்னனாக விளங்கினான். அவன் தன்னுடைய சோழஅரச குலத்துக்கு ஏற்பட்டிட்ட வீழ்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும் ஈடு செய்வதற்கு மிகப்பெரிய முயற்சிகளைத் தொ

டர்ந்து மேற்கொண்டான். மிகச்சிறந்த வீரனாகவும், தீரனாகவும் விளங்கிய அவனால் சோழ அரச குலத்தை எதிர்த்துச் செயல் பட்டிட்டவர்களையும் சூழ்ச்சி செய்தவர்களையும் முறியடிக்க முடியவில்லை. ஏனெனில் அந்த சதிகாரர்கள் அறிவுக் கூர்மையும். குள்ள நரிப்பண்பும் மிக்கவர்களாக இருந்தார்கள். அத்துடன் அன்றைய மக்கள் இனப்பற்றும் நாட்டுப்பற்றும் அற்ற அடிமைகளாக வாழ்வதிலேயே ஆர்வமுடையவர்களாக இருந்திட்டார்கள். அதனால் நாட்டு மக்களுடைய துணையும் உதவியும் போதி அளவில் கிடைக்கவில்லை.

இவையன்றி கி. பி 1040 பங்குனி மாதம் முழுநிலா நாளில் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய காவிரியாற்றங்கரைக் கருவூரூர் முதலாம் இராசராசனுக்குச் சாபம் கொடுத்து விட்டுப் பல்லவ மகளிர் முன்னும் பின்னும் விளக்கொளி காட்டப் பொன்னிறப் பாவையுடன் நிலவறைக்குள் சென்றிட்டார். சித்திரை மாத முழுநிலவில் தஞ்சைப் பெரிய கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்திட்ட முதலாம் இராசராசன் அன்றிரவு கோபுரத்து மேலிருந்து நிலவறைக்கு நேராகக் குதித்து நரபலியானான். [1]

‘...... அருளாட்சிக்காக அரியணை அமைக்கப்பட்டது...... சந்திரகுலம், பாரதம் பாடிய பெருந்தேவனாரை பாதுகாக்காதப் பழிக்குள்ளாகியதால் சூரியகுலம் அரியணையில் அமர்த்தப்பட்டது. இதுதன் குலப் பெருமையை இராமகாதையாகப் பாடிய கவிச்சக்கரவர்த்தியையும் அவரது மகனையும் கொன்று பழி தேடி கொண்டது ......”

‘...... ஏட்டுலகில் அருளாட்சி நிலைநாட்டிடவே காவிரியாற்றங்கரைக் கருவூரூர் ‘பாரதம்’ ‘இராமாயணம் எழுதச் செய்தார். நாலாயிரத் திவ்விய பிரபந்தமும், தேவாரத் திருமுறைகளும் தொகுக்கச் செய்தார். ஆயிரக்கணக்கில் பழமையான நூல்களைத் தொகுத்தார். நூற்றுக்கணக்கில் புதிய நூல்களை எழுதினார் நாற்பத்தெட்டுச். சிவன் கோயில்களை ஆயிரத்தெட்டுச் சிவாலயங்களின் உயிர்ப்பீடமாகக் கட்டினார். ...... இவர் அருளாட்சிக்காக வளர்த்த சோழப் பேரரசு வளர்ந்த வேகத்தில் வீழ்ந்தது ......’

---

1 அதாவது தஞ்சைப் பெரிய கோயில் திட்டமிட்டபடி முழுமையாகப் கட்டி முடிக்கப்படவில்லை.



# ‘கதிரவனின் கலைக் கோலங்கள்’

## VI

## உங்களின் சிந்தனைக்கு !

பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களைப் பற்றியும் அவரது பணிகள், அவர் உருவாக்கிய பேரரசின் பேரரசர்கள், அவர்களின் காலங்கள், பேரரசின் வீழ்ச்சி, அவரின் திருப்பணிகள், கலைப்பணிகள் ...... எனும் இன்ன பிறச் செய்திகளை அறிந்திட்ட பின், நான் எனது தந்தையிடம் பல ஆண்டுகளுக்கு முன் அறிவுநிலையில் நின்று அறிவு வினைக்களை எழுப்பினேன். அதற்கான விடையை எனது தந்தைச் செப்பாமல், ‘உனது கேள்விகளை மொழியியல் வல்லுனர்களின், வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் சிந்தனைகளுக்கு நூலாக வடித்து அனுப்பு. அவர்கள் சிந்தித்து ஆராய்ந்து அறிந்து, உலகுக்கும், வருங்கால சமுதாயத்திற்கும் அறிவிக்கட்டும்! சித்தர்களின் கருத்துக்கள், கலை வடிவங்கள் உண்மை! அல்லது தவறு! இவற்றில் எது என்பதை ஆராய்ந்து அறிவிக்க, உனது வினைக்களை ஒன்றிணைத்து உருவம் ஈந்திடு!’ என்றார்.
அறவுடையோரே!

## ஆராய்ச்சிக்குரிய எனது வினைக்கள் !

1) சித்தர் கருவூரூர் 255 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்திட்டார்! என்பது நம்பதக்கதாக இல்லை. இருப்பினும் தெளிவான சான்றுகள் ‘குரு பாரம்பரியம்’ ‘மூவர் தோற்றம்’...... முதலியவைகளில் உள்ளன.

2) இவரே பிற்காலச் சோழப் பரம்பரையின் தந்தை. முதலாம் இராசராச சோழன் வரை அரச குருவாக இருந்துள்ளார். இவரைப் பற்றிய கல்வெட்டுச் சான்றுகள் இல்லாமல் போனது ஏன்?

குரு பாரம்பரியத்திலும், இவர் நூல்களிலும், இவரது மகன் கருவூர்த் தேவர் நூல்களிலும், பேரன் திருமாளிகைத்

தேவர் நூல்களிலும், 'மூவர் தோற்றம்' என்ற நூல்களிலும் இதற்கு எண்ணற்ற விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

என்னதான் இவர் ஆணையிட்டாலும் பிறர் இவர் பற்றி, இவருக்குப் பிறகாவது கல்வெட்டுக்கள் உருவாக்காமலா இருந்திருப்பார்கள்?

சித்தர் கருவூரர் தன்னைப் பற்றி எதுவும் எந்தக் கல்வெட்டிலும், செப்புப் பட்டயங்களிலும் கவிஞர் தம் நூல்களிலும் குறிப்பிடக் கூடாது என்று ஆணையிட்டிருந்தது ஏன்?

3) தஞ்சைப் பெரிய கோயில் கட்டி முடிக்கப்பட்டுப் பல விழாக்கள் கொண்டாடப்பட்டதாகப் பல சான்றுகள் உள்ளன. ஆனால் கி.பி. 1040 இல் தான் இக்கோயில் முழுமை பெற்றுக் குடமுழுக்கு நிகழ்ந்தது என்ற செய்தி குருபாரம்பரியத்திலும் புறநூல்களிலும் உள்ளன.

குடமுழுக்கு நிகழ்ந்த மறுநாளிலேயே முதலாம் இராசராசன் தனது 108 வது வயதில் தஞ்சைப் பெரிய கோயில் கோபுர உச்சியிலிருந்து சித்தர் கருவூரரின் சன்னதியின் திருமுன் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்ட செய்தி வரலாறுகளில் இல்லை. ஆனால் குருபாரம்பரியத்திலும், பிறநூல்களிலும் தெளிவாகக் காணப்படுகின்றன.

இவையிரண்டும் நம்ப முடியாதவைகளாகவே உள்ளன. ஒருவேளை கோயிலின் சுற்றுமதில், அகழி ...... முதலிய அனைத்தும் கட்டி முடிக்கப் பெற்றபிறகு நடந்த நிறைவுக் குடமுழுக்கு கி.பி.1040 இல் நடந்திருக்கலாமோ என்னவோ?

4) ஆனைக்குட்டி போலிருந்த இராசராசனின் அமைச்சன் அநிருத்த பிரம்மராயன் புலிக்குட்டி போல் ஓடியாடி செயல்பட்டது, பதினோராவது பதினென் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம்சித்தர்காவிரியாற்றங்கரைக் கருவூரர் வழங்கிய 'அமுதம்' 'காயகல்பம்' '★ கருநெல்லிக் கனி' 'அகத்தியர் குழம்பு' 'வான் மெழுகு' 'வளம்'

★ சங்ககால ஔவையாருக்கு மரணமில்லா வாழ்வைத் தரும் கருநெல்லிக்கனி அதியமான் எனும் மன்னனால் கொடுக்கப்பட்டது. அதனாலே ஔவையார், சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனார் முதலியோர் காலம்வரை ஆயிரமாண்டு காலங்கள் வாழ நேரிட்டது.
—'குருபாரம்பரியம்'



'தாமிரச் சூரணம்' 'இலிங்கச் சூரணம்' ...... முதலியவைகளாலேயே என்று 'சித்தர் மருத்துவம்' 'குருபாரம்பரியம்' மூவர் தோற்றம்' ...... முதலிய நூல்களில் ஒரே மாதிரியான, வாசகங்கள் காணப்படுகின்றன. இவ்வாசகங்கள் முதலில் குருபாரம்பரியத்திலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும். இவ்வாசகங்கள் இவரால், சிறந்த மருந்துகள், அரசனுக்கும், அரசியல் அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டதை விளக்குகின்றன. எனவே இவர் இவ்வரிய மருந்துகளால் 255 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்திருக்கலாம்.

5) கருவூரரின் கால ஆராய்ச்சியில் முதலாம் இராசராசனின் அதிகாரிகளாக (க) அருமொழிப் பல்லவரையன் (ங) இராசகேசரி மூவேந்த வேளான் (ச) உலோக மாராயன் (ஞ) கரிகாலக் கர்ணப் பல்லவரையன் (ட) திருமலை வெண்காடன் (ண) தென்னிலங்கை கொண்ட அரிகேச வர்மன் (த) தென்னவன் மூவேந்தன் வேளான் (ந) தொழும்பர் வென்ற கலிங்கராயன் (ப) பராந்தகப் பல்லவரையன் (ம) நித்த விநோத மழவாராயன் (ய) நித்த விநோத மகாராசன் (ர) இராச வித்யாதர விழுப்பரையன் (ல) இராச வித்யாதர சேதிராயன் (வ) இராசராசவான கோவரையன் (ழ) இராசராசத் தென் கொண்டான் (ள) வில்லவன் மூவேந்த வேளான் (ற) செயங் கொண்ட சோழப் பிரும்மராசன் ..................

இப்படி பதினெண்மர் குறிக்கப்படுகின்றனர். பதினெண் சித்தர்கள்' 'பதினெண் மேல் கணக்கு' 'பதினெண் கீழ்க் கணக்கு' 'பள்ளுப் பாறை முதலான பதினெண் சாதிகள்...... என்றிப்படி பதினெட்டு என்ற எண்ணிக்கைக்காக இவை குறிக்கப்பட்டனவா? அன்றி உண்மையில் இத்தனை அதிகாரிகள் இருந்திட்டனரா?

6) சித்தர் கருவூரர் 'பொன்னிறப் பாவை' யைத் தேடித் தாய்லாந்து நாட்டு மூத்த இளவரசியை மனந்தாரென்றும்; முதலாம் இராசராசன், இளையவளான 'இலாடமாதேவி' யை மனந்தான் என்றும் 'குருபாரம்பரியம்' கூறும் செய்திக்கு வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை. இவ்வளவு பெரிய நிகழ்ச்சி பிறரால் குறிக்கப்படாது விடப்படுமா? – ஐயம் நீங்குமா?

இராசராசனின் மனைவிகளாக (1) அபிமானவல்லி (2) இலாடமாதேவி (3) உலோகமாதேவி (4) சோழமாதேவி (5) சேரமாதேவி (6) திரையலோக்யமாதேவி (7) திருபுவன தேவி (8) பஞ்சவன் மாதேவி (9) பிருத்விமாதேவி (10) மலைய மான் மாதேவி (11) முத்தரையன் மாதேவி (12) மீனவன் மாதேவி (13) வில்லவன் மாதேவி (14) வானவன் மாதேவி (15) வீரநாராயணி (16) தாக வீரமாதேவி (17) வேவவல்லி மாதேவி (18) ஏழிசை கொண்ட மாதேவி.

என்றிப்படி பதினெட்டு பேர்கள் குறிக்கப்படுவதும் ஐயத்துக்குரியது.

7 கருவூரூரின் நூல்களிலும் 'மூவர் எழுதிய குருபாரம் பரியத்திலும், பிற நூல்களிலும் முதலாம் இராசராசன நாற்பத்தெட்டு சிறப்புப் பெயர்களால் குறிக்கப்படுகின்றான். இதனை 'மண்டலச் சிறப்புப் பெயர் கொண்ட மாமன்னன் இராசராசன்' என்ற சொற்றொடர் வலியுறுத்துகின்றது.

சித்தர்கள் இருபத்தியேழு விண்மீன்கள். பன்னிரண்டு இராசிகள். ஒன்பது கோள்கள் ஆக நாற்பத்தெட்டு ஒரு மண்டலம் என்று கணக்கிட்டுள்ளனர். இதைத்தான், சித்த மருத்துவர்கள் 'ஒரு மனிதன் நோய்க்குரிய மருந்து பயனளிக்கக் குறைந்தது ஒரு மண்டல காலம் (48 நாட்கள்) ஆகும்' என்கின்றனர்.

ஆனால் இராசராசனின் சிறப்புப்பெயர்கள் கற்பனையாகக் கூறப்பட்டிருக்குமோ என்று ஐயுற வேண்டியுள்ளது.

1 அட்டமாசித்தியான் 2 அன்ன பாலன் 3 அரிய மர்த்தனன். 4 அநபாயன். 5 அபயகுல சேகரன். 6 அரிதுர்க் கலங்கன். 7 அருள் மொழி 8 அன்ன தேவன் 9 அழகிய சோழன். 10 அண்டமெலாங் கொண்டான். 11 இரணமுக பீமன் 12 இரவிகுல மாணிக்கம் 13 இரவிவம் சசிகாமணி. 14 இரவிகுல திலகம் 15 இராச கண்டியன். 16 இராச சிங்கன் 17 இராசசர்வஞ்ஞன். 18 இராசராசன் 19 இராசாச்ரயன். 20 இராசகேசரிவர்மன் 21 இராச மார்த்தாண்டன். 22 இராசேந்திர சிம்மன் 23 இராச விநோதன். 24 உத்தம சோழன். 25 உலகம் முழுதும் கொண்டான்



26 உத்துங்க துங்கன். 27 உலகளந்தான். 28 உய்யக் கொண்டான். 29 கடாரம் கொண்டான் 30 காந்தளூர்க் கொண்டான் 31 கேரளாந்தகன் 32 கோனேரின்மை கொண்டான் 33 சண்டபராக்ரயன் 34 சத்ரு புயங்கன். 35 சிங்களாந்தகன் 36 சிவபாத சேகரன். 37 சோழ மார்த்தண்டன் 38 சோழேந்திர சிம்மன் 39 திருமுறை கண்ட சோழன் 40 தெலிங்ககுல காலன் 41 நிகரிலி சோழன் 42 நித்ய விநோதன் 43 பண்டித சோழன் 44 பாண்டிய குலாசினி 45 பெரிய பெருநான் 46 மும்முடிச் சோழன். 47 மூர்த்த விக்ரமபரணன் 48 சனநாதன். 49 செயங்கொண்ட சோழன். 50 சத்திரிய சிகாமணி - இப்படி எண்ணிக்கையில் ஐம்பது சிறப்புப் பெயர்கள் உள்ளன.

இப்படி என் தந்தையே ஐம்பது சிறப்புப் பெயர்களைத் தொகுத்துள்ளார். நான் சித்தர்களின் நூல்களுக்கு நகல்கள் எடுக்கும் பொழுது இந்த முதலாம் இராசரரசனின் சிறப்புப் பெயர்களாக 1 செயதேவன் 2 புகழ்ச் சோழன் 3 அரசர்க் கரசன். 4 விஞ்சை வல்லான். 5 அண்ட பயங்கரன் 6 பகையிலான் 7 ஏழிசை வல்லான் 8 பெரிய உடையார் கண்ட தேவன் 9 கூத்த நேசன் 10 கலைவல்லான் 11 மெய் கண்டான் 12 வேத நேசன் .... என்றிப்படிப் பன்னிரண்டுக்கு மேல் தொகுக்க முடிந்தது.

எனவே அவனுடைய சிறப்புப் பெயர்கள் 'மண்டலம்' என்ற சொல்லால் எண்ணிக்கையிடப் பட்டுள்ளமை புரியவில்லை ?

'மண்டலச் சிறப்புப் பெயர்கள் கொண்ட மாமன்னன் இராசராசன்' என்ற தொடருக்கும் நாற்பத்தெட்டு என்ற எண்ணைக் குறிக்கும் 'மண்டலம்' என்ற சொல்லுக்கும் தொடர்பில்லை என்பதே என் கருத்து.

8 சித்தர் கருவூரூரின் காலத்தில் வழிபாட்டு நிலையங்களின் வகைகள் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. 1 ஆலயம் 2 கோயில் 3 பூங்கோயில் 4 சுடிகைக் கோயில் 5 மாடக் கோயில் 6 கோட்டம் 7 நியமம் 8 நகரம் 9 பள்ளி 10 தளி 11 மண்தளி 12 கற்றளி 13 தானம் 14 ஈச்சுரம்

15 விண்ணகரம் 16 தூங்கானை மாடம் 17 மாடம் 18 பீடம் 19 அமளிகை 20 இருக்கை 21 திருவடி 22 திருப்பதி 23 பாழி 24 சோலை 25 திராவிடம் 26 வேசரம் 27 நாகரம் ...... இப்படிக் குருபாரம்பரியத்தின் முடிவுவரையுள்ள வழிபாட்டு நிலையங்களின் பெயர்களைத் தொகுக்கும்போது கிடைக்கும் இத்தனை வகைகள் இவருக்கு முன்பு இருந்ததாகத் தெரியவில்லை. எனவே வழிபாட்டு நிலையங்களில் இந்த அளவு நுட்பமான வேறுபாடுகளை யெல்லாம் உண்டாக்குவதற்கு 250 ஆண்டுகளாவது வாழ்ந்திருந்தால் தான் முடியும். 'ஆலயம் அழைக்கிறது' என்ற நூலில் இவைபற்றி மிகுதியாக எழுதியுள்ளேன்.

சிலவற்றின் வகைகளை கீழே தருகிறேன்.

பூங்கோயில் — கோயில் குட முழுக்குப் பணிக்காகவும் கோயில் கருவறை வெட்ட வெளியில் அமைக்கப்படும் போதும் அமைக்கப்படும் வழிபாட்டு நிலையம்.

தூங்கானை மாடம் — தூங்குகின்ற யானையைப் போன்ற அமைப்புடைய கோயில்.

மாடக்கோயில் — தரையில் கருவறையமைக்காமல் மாடிமேல் அமைக்கப்படும் கோயில்.

குடிசைக் கோயில் — கூரை வேயப்பட்ட கோயில். [தருப்பைப்புல், கோரை, காமாட்சியம்மன் புல்] புற்களால் ஆனது.

திராவிடம் — எட்டுப் பட்டைகளையுடைய விமானமுடைய கோயில்.

நாகரம் — நான்கு பட்டைகளையுடைய விமானமுடைய கோயில்.

வேசரம் — வட்டவடிவமான விமானமுடைய கோயில்.

பள்ளி — வீரமரணமடைந்தவர்கள் புதைக்கப்பட்ட இடங்களின் மேல் கட்டப்படும் கோயில்.



சித்தர் கருவூரர் மேற்கண்ட இருபத்தியேழு வகையான கோயில்களை உலகம் முழுவதும் அமைத்ததாகவும்; அதற்காகப் பலமுறை உலகச் சுற்றுப் பயணம் செய்ததாகவும் குருபாரம்பரியம் கூறுவதால்; இவர் 255 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்திருக்கலாம் என்று பகுத்தறிவுக்கேற்ப நம்ப வேண்டியுள்ளது.

எனது கடலோடி, காடோடி, நாடோடி வாழ்வில், நான் சந்தித்த தவசிகள், முனிவர்கள் இருடிகள், ஞானிகள், மகான்கள், சமாது நிலைப் பொறியார்கள்...... முதலியவர்களின் வாழ்நாட்களை அளந்தறிய இயலாத நிலைகள் பலமுறை ஏற்பட்டன. காலத்தையும், இயற்கையும் வென்று வாழும் அம் மனிதர்களைக் கடவுளாகவே கருதினேன் நான் அப்பொழுதுதான் பதினோராவது பதினென் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் 255 ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்ததாகக் குருபாரம்பரியம் கூறுவது மூட நம்பிக்கையல்ல; தவறல்ல; விஞ்ஞானத்துக்கும், மெய்ஞ்ஞானத்துக்கும் உகந்த ஒரு செய்தியே என்றுணர்ந்தேன்

மேலும் இமயமலைச்சாரல் (கங்கோத்ரி, யமுனோத்ரி) பிரம்மபுத்திரா நதிச் சாரல், பீகார், அஸ்ஸாம் ஒரிசா, விந்திய மலைப் பகுதி குடகு, கொல்லிமலை, பொதிகைமலை ...... முதலிய பகுதிகளில் பச்சிலை மூலிகை பறித்துத் தரும் குறமகளிர் பதினாறு ஆண்டுப் பருவ மங்கைப் போலவே எப்பொழுதும் காட்சித் தருவது 'காயகல்பம்' 'அமுதம்' கருநெல்லிக்கனி' 'இறவாயாக்கை' .... முதலிய சொற்கள் உண்மையான ஓர் ஒப்புயர்வற்ற பொருளுடையன என்று எண்ணச் செய்தது. எனவே 'கருவூரரின் கால ஆராய்ச்சி' என்ற நூல் கற்றுவல்லாரின் அறிவுக்கும் ஆர்வத்துக்கும் முயற்சிக்கும் பெருவிருந்தாய் இருக்கும் என்பது தெளிவு.

10 "அாழியாழ் கைமுதல் விண்தொடு
கலசம்வரை ஒருமண்டல ஆளுயரம்
கொண்ட கோபுரம் கண்ட கருவூரர்
குடமுழுக்குக் காண முடியாமல் போனது"
— குருபாரம்பரியம்.

இதன்படி பார்த்தால் கோபுரம் அடிப்படை முதல் நுனி வரையிலுள்ள உயரம் நாற்பத்தெட்டு ஆளின் உயரமாகும். இன்று அளந்து பார்த்தால் 200 அடி உயரம் கருங்கல்லினால் ஆன கோபுரம் உள்ளது. ஓர் ஆள் உயரம் என்பது ஆறடி எனவே $6 \times 48 = 288$ அடிகள்° கோபுரம் தரை மட்டத்துக்கு மேல் 200 அடி உயரமும்; அடிப்படையில் அதாவது மண்ணுக்குள் 88 அடி உயரமும் கொண்டது என்று புரிகிறது. இதைக் கட்டடக் கலைவல்லார்தான் சரி பார்க்க வேண்டும்.

குருபாரம்பரியப்படி 'சித்தர் கருவூரின் தலைமையின் கீழ் 1 வீரச் சோழன் குஞ்சர மல்லனை இராசராசப் பெருந் தச்சன் 2 நித்த வினோதப் பெருந்தச்சன். 3 கண்டராதித்தப் பெருந்தச்சன். 4 அசகாயச் சூரப்புலிப் பெருந்தச்சன் 5 பரகாயப் பிரவேச வல்லப் பெருந்தச்சன். 6 ஆடல் வல்லானுடன்ற இமயவரம்பப் பெருந்தச்சன். 7 சகன்மாதப் பயந்த நித்யப் பெருந்தச்சன். 8 மும்முடிச் சோழப் பெருந்தச்சன். 9 தேவதச்சன். 10 பஞ்சபூதம் வென்ற மாகாளிப் பெருந்தச்சன் 11 வேங்கை நாட்டுச் சிம்மப் பெருந் தச்சன் 12 வீர சிகாமணிப் பெருந்தச்சன் 13 இராசராச வித்தியாதரப் பெருந்தச்சன் 14 செயங்கொண்ட சோழப் பெருந் தச்சன் 15 சூரசிகாமணிப் பெருந் தச்சன் 16 தெலிங்ககுல கால நித்த வினோதப் பெருந் தச்சன் 17 காந்தர்வ சாலி வில்லிப பெருந் தச்சன் 18 சூரிய குல காவலன் அழகிய சோழன் திருவடித் தச்சன்.

என்னும் பதினெட்டுச் சிற்பிகளும் கனவிலும், நனவிலும் தேவ தச்சனை விசுவகர்மாவை வேண்டிச் செயல்பட்டுத் தஞ்சை இராசராசேச்ரவப் பெருங்கோயிலை கட்டிமுடித்தனர். அருள்மிகு இராசராசேச்வரமுடையார் திருக்கோயில் பணிக்கு மாமன்னனின் சேனதிபதிகளான 'கிருட்டிணன் ராமனை மும்முடிச் சோழ பிரும்மராயன்' என்பானும் 'குரவன் உலகளந்தானை இராசராச மகாராசன்' என்பானும் சித்தர் கருவூரின் இரு கண்களாக செயல்பட்டனர்

—குருபாரம்பரிய வாசகம்.

இவற்றின்படி மன்னர் மன்னன் முதலாய் இராசராசனின் இரண்டு சேனதிபதிகளும், பதினெட்டுப் பெருந் தச்சர்களும்



சித்தர் கருவூரின் ஆணைப்படி இருபத்தைந்தாண்டுகள் செயல்பட்டுத் தஞ்சைப் பெரிய உடையார் கோயிலைக் கட்டி முடித்தனர். இவை வரலாற்று வல்லுநர்களால் ஆராயப்பட வேண்டியவை.

11 (i) தஞ்சையில் பெரிய உடையார் கோயிலில் நூற்றியிருபதுக்கு மேற்பட்ட வகையான வேலையாட்கள் பணிபுரிந்தனர் (ii) மெய்க்காப்பாளர்கள் நூற்றிருபதுபேர் இருந்தனர். (iii) நானூறு கூத்திகள் இருந்தனர். ['பதியிலார்' 'இடபத்தளியார்' 'தேவரடியாள்' என்றிவர்கள் புகழப் பட்டனர்] (iv) சிறந்த நாட்டிய ஆசிரியர்களாக

1 மும்முடிச் சோழ நிருத்தமாராயன்.

2 செயங் கொண்ட தேவ நிருமத்தராயன்.

3 தெலிங்க குல காலன் நிருமத்தராயன்.

4 இராச வித்யாதர நிருமத்தராயன்.

5 மும்முடிச் சோழ கடிகை மாராயன்.

6 இராசராச கடிகை மாராயன்.

7 செயங் கொண்ட சோழ கடிகை மாராயன்.

8 இரவிவம்ச சிகாமணித் தேவதிருத்த மாராயன்.

9 இராச கேசரி வர்மச் சோழ நிருத்த மாராயன்.

10 இராச விநோதக் கடிகை மாராயன்.

11 சண்ட பராக்ரம சோழ நிருத்தமாராயன்.

12 சிவபாதச் சேகரச் சோழ நிருத்த மாராயன்

13 சோழேந்திர சிம்ம தேவகடிகை மாராயன்.

14 சோழ மார்த்தாண்ட கடிகை மாராயன்.

15 பண்டித சோழ நிருத்த மாராயன்.

16 மூர்த்த விக்ரமாபரணக் கடிகை மாராயன்.

17 நிகரிலி சோழ நிருத்த மாராயன்.

18 பெரிய பெருமாள் கடிகை மாராயன்.

என்று பதினெட்டுப் பேர் இருந்தனர்.

இவைபற்றி 'ஆலயம் அழைக்கிறது' 'கோயில் கூப்பிடுகிறது' 'கருவூராரின் பூசாவிதிகள்' 'கடவுளைக் கண்டு பிடித்தவர்கள்' 'இறைவழிபாட்டில் குறையும் நிறையும்' 'சோழர் எழுச்சியும் வீழ்ச்சியும்' 'தஞ்சைப் பெரிய கோயில் 'செவிவழி வரலாறு' 'மறைவழி [ஏட்டில் எழுதி இரகசியமாக்கப்பட்டவை] வரலாறு' 'வாய்வழி (நாடோடிக் கதை, பாடல்) வரலாறு' 'உலக வரலாற்றுப் பேராசிரியர் வரிசையில் சித்தர் கருவூரார்' 'சித்தர் நெறி' முதலிய எமது நூல்களில் விரிவாகச் செய்திகள் தரப்பட்டுள்ளன.

12 சித்தர் கருவூரார் படைத்த சிலைகள்.

## செப்புத் திருமேனிகள் :-

| | | |
|---|---|---|
| (i) | ஆடவல்லார் சிலைகள் | — 5 |
| (ii) | இலிங்கபுராண தேவர் சிலை | — 1 |
| (iii) | உமா பரமசுவரியாள் சிலைகள் | — 2 |
| (iv) | திருகண்ட மூர்த்தி சிலைகள் | — 2 |
| (v) | கணபதி சிலைகள் | — 3 |
| (vi) | கல்யாண சுந்தரர் | — 2 |
| (vii) | சண்டேச்வர தேவர் சிலைகள் | — 5 |
| (viii) | சண்டேச்வரப் பிரச்சாரத் தேவர் சிலைகள் | — 2 |
| (ix) | தட்சிணமேரு விடங்கர் சிலைகள் | — 2 |
| 10 | தஞ்சை விடங்கன் சிலை | — 1 |
| 11 | தட்சிண மூர்த்திகள் | — 5 |
| 12 | தஞ்சை அழகர் | — 1 |
| 13 | பாசுபத மூர்த்தி சிலைகள் | — 5 |
| 14 | பதஞ்சலி தேவர் சிலைகள் | — 5 |
| 15 | பஞ்ச மூர்த்திகள் | — 6 |
| 16 | திருப்பலி எழுந்தருளும் பொன்னின் கொள்கைத் தேவர் சிலைகள் | — 5 |
| 17 | பிச்ச தேவர் சிலைகள் | — 5 |
| 18 | பெரிய நாயகி சிலைகள் | — 6 |
| 19 | மகா விஷ்ணுக்கள் | — 8 |
| 20 | மகா விஷ்ணுக்களின் நம்பிராட்டியார்கள் (எண்மூவர்) | — 24 |
| 21 | மகா மேரு விடங்கர் | — 8 |
| 22 | மகா மேரு விடங்கரின் நம்பிராட்டியார்கள் | — 8 |
| 23 | முருகன், வள்ளி, தெய்வயானை | — 8 |
| 24 | (குழந்தை வடிவேலன்) முருகன் | — 8 |
| 25 | இடபம் (ரிஷபம்) | — 5 |
| 26 | இடப தேவர் (ரிஷப தேவர்) | — 5 |
| 27 | இராசராசன் | — 8 |
| | | 148 |

∴ நூற்று நாற்பத்தெட்டுச் செப்புத் திருமேனிகள்.

## ஐம்பொன்னாலான சிலைகள் :-

| | | |
|---|---|---|
| 1 | சிவலிங்கம் | — 8 |
| 2 | சத்திலிங்கம் | — 8 |
| 3 | சிவன், பார்வதி, முருகன் | — 8 |
| 4 | பெரிய நாயகி | — 5 |
| 5 | மாரியம்மன் சிலைகள் | —16 |
| 6 | காளியம்மன் | —16 |

| | |
|---|---|
| 7 பங்காரு காமாட்சியம்மன் | — 3 |
| 8 குழந்தை வடிவேலன் | — 4 |
| 9 முருகன் வள்ளி தெய்வயானை | — 6 |
| 10 புத்தர் | —32 |
| 11 தீர்த்தங்கரர் (சமணம்) (மகா வீரர்) | — 8 |
| | 119 |

ஃ நூற்றுப் பத்தொண்பது செம்பொன்னாலான சிலைகள்.

**சொக்கத் தங்கத்தாலான சிலைகள் :-**

| | |
|---|---|
| 1 சுந்தர சோழர் | — 2 |
| 2 இராசராசன் | — 3 |
| 3 ஆடல் வல்லார் | — 5 |
| 4 பெரிய நாயகி | — 3 |
| 5 புத்தர் | — 5 |
| 6 மகாவீரர் | — 3 |
| 7 பங்காரு காமாட்சியம்மன் | — 1 |
| 8 புன்னை நல்லூர் மாரியம்மன் | — 1 |
| 9 நிதம்ப சூதனி | — 1 |
| 10 தில்லைக் காளி | — 1 |
| 11 பாவாடைராயன் | — 1 |
| 12 பாவாடை அம்மன் | — 1 |
| 13 பச்சை மாரியம்மன் | — 1 |
| 14 சமயக் குரவர்[1] நால்வரின் சிலைகள் | — 4 |
| 15 மகாவிஷ்ணு தேவியுடன் | — 1 |
| | 33 |

முப்பத்துமூன்று சொக்கத்தங்கத்திலானச் சிலைகள்.

1 ஒவ்வொருவருக்கும் நான்கு சிலைகளா? அல்லது மொத்தத்தில் நான்கா? என்பது விளங்கவில்லை.



**வெண்பளிங்கு (ஸ்படிக) சிலை**

நாற்பத்தெட்டு இலிங்க மூர்த்திகள்.

**வைரச் சிலைகள்.**

ஐந்து ஆடவல்லார் சிலைகள்.

**கோமேதகச் சிலைகள்.**

ஐந்து ஆடவல்லார் சிலைகள்.

**கருங்கல் சிலைகள் :**

தம்மாணைக்கர்களைக் கொண்டு சித்தர் கருவூரர் ஆயிரத்தெட்டுச் சிவலிங்கங்களைப் படைத்தார்; இருநூற்று நாற்பத்திமூன்று சத்தி வடிவச்சிலைகளை மாணைக்கியர்களைக் கொண்டு படைத்தார். தாமே முன்னின்று இராசராசன் வரை வாழ்ந்த எல்லா அரசர்களின் சிலைகளையும் படைத்தார். இவைபற்றிக் கருவூரர் வரலாறில் விரிவாகக் காணலாம்.

13 இராசராசனின் அரசியல் அலுவலர்கள் :

1 இராசகேசரி நல்லூர் கிழவன் காராயில் எடுத்த பாதம் (திருமந்திற ஓலைநாயகம்)

2 செம்பங்குடியான் தனிச்சை சதுர விடங்கன் (பெரியவுடையார் கோயில் கணக்கன்)

அரச காரியங்களையும் 'திரு' காரியங்களையும் கண்காணித்திட மூவர் :

3 மும்முடிச் சோழ கடிகை மாராயன்.

4 செயங்கொண்ட சோழ கடிகை மாராயன்.

5 இராசராச கடிகை மாராயன்.

**அமைச்சர்கள் எட்டுப்பேர்.**

6 அநிருத்த பிரம்மராயர்.

7 ஐவர் கோயில் பெரிய வாளார்.

8 கலிங்கம் கொண்ட மும்முடிச் சோழன்.

9 ஈழுதேவர்.

10 கண்டராதி பெருமான்.

11 வேணாட்டடிகள்.

12 உய்யக்கொண்ட விழுப்பரையர்.

13 பள்ளிக் கொண்ட காராளன்.

## சேனாதிபதிகள் எண்மர்

14 இராச மார்த்தாண்ட கேசரி.

15 இராசராசப் பழுவேட்டரையர்.

16 கண்டீச்வரப் பழுவேட்டரையர்.

17 இராசகண்டியப் பெருந்தேவன்.

18 இராசேந்திர சிம்மன்.

19 நிகரிலி விக்ரமா பரண தேவன்.

20 கிருட்டிணன் ராமனை மும்முடிச்சோழ பிரும்மராயன்.

21 குரவன் உலகளந்தானை இராசராச மகாராசன்.

### மண்டல[1] நாயகர்கள் பதினெண்மர்

22 மும்முடிச் சோழதேவன்.

23 சுந்தர சோழ தேவன்.

24 கபில தேவன்.

25 வாண கோவரையன் சேதிராயன்.

26 சயங்கொண்ட சோழ பிரும்ம மாராசன்.

27 இராசராச வாணக் கோவரையன்.

28 ஈழம் கொண்ட வந்தியத் தேவன்.

---

1 மண்டல நாயகர்கள் பதினெண்மர் : என்பது ஆய்வுக்குரியது.



29 அருமொழிப் பல்லவரையன்.

30 பராந்தகப் பல்லவரையன்.

31 கரிகாலப் கர்ணப் பல்லவரையன்

32 திருமலை வெண்காடன்.

33 நித்த விநோத மகாராசன்.

34 உலோக மாராயன்.

35 இராச வித்யாதர விழுப்பரையன்.

36 நித்த விநோத விழுவேட்டரையன்.

37 அரிகேசரி வர்மப் பழுவேட்டரையன்.

38 தென்னவன் மூவேந்த வேளான்.

39 வில்லவன் மூவேந்த வேளான்.

நாட்டில் ஒழுங்கையும் நீதியையும் நிலைநாட்டிட அறம் காத்தார் ஒன்பது பேர் இருந்தனர் இவர்கள் சிவன் கோயில்களில் அமர்ந்து வழக்குகளை விசாரித்து நீதி வழங்கினார்கள்.

நீதிமன்றங்கள் ஒன்பது இடங்களில் இருந்தன ஒவ்வொன்றும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டவையாக இருந்தன. அதிகமான உறுப்பினர்கள் கூறுகின்ற முடிவான கருத்தையே நீதிபதி வழக்கின் முடிவாக நீதியாக அறிவித்தார்.

40 ஆலங்குடிமடம் காராளன் போசன்

41 குடமூக்கு வாண கோவரையன்.

42 உறையூர் முத்தரையன்.

43 மதுரை பஞ்சவன் உலோக மாராயன்.

44 வேங்கி விசயாலயப் பல்லவரையன்.

45 நிசும்ப சூதனப் பிரும்ம மாராசன்.

46 ஆதித்த கரிகால விழுப்பரையன்.

47 உத்தமச் சோழப் பழுவேட்டரையன்.

48 மகாமேரு விடங்கச் சனநாதன்.

இப்படி நாற்பத்தெட்டுப் பேர்களைத் துணையாகக் கொண்டு இராசராசன் நாட்டாட்சி செய்தான் என்ற செய்தி குரு பாரம்பரியத்தில் உள்ளது.

நாற்பத்தெட்டு என்ற எண்ணிக்கை சித்தர்களுக்குரியது இது சித்த மருத்துவத்திலும், வான சாத்திறத்திலும், சிறப்பாகக் கருதப்படும் எண்ணிக்கை எனவே இந்த எண்ணிக்கை வலிந்து கொள்ளப்பட்டதா? இராசராசனல் ஏற்றுப் போற்றிக்கையாளப்பட்டதா? என்பதையெல்லாம் ஆராய்ச்சியாளர்கள் முடிவு கட்டிக் கொள்ளட்டும்.

பொருள் வளமும் அறிவியல் ஆர்வமும் சமயப் பற்றும் வரலாற்று நாட்டமும் உடைய நல்லவர்கள் சித்தர்களின் நூல்கள் வெளிவர உதவ முன்வருமாறு வேண்டுகிறன்.

"இனி என் செயலாவது பராபரமே"

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது"

......... முதலிய ஆன்ரோர் கருத்துரைகளை எண்ணி அமைதியடைகின்றேன்.

அன்பு சித்தர்.

# பதினெண் சித்தர் சத்தி பீடம்

## (திரிபுர சுந்திரி சன்னிதானம் பவானி சன்னிதானம்)

## PATHINEN SIDDHAR SAKTHI PEEDAM

## AN INSTITUTION TO STUDY THE SIDDHA CULT

[A COSMIC RESEARCH CENTRE]

'மனித இனம் கண்ட முதல் மதம் இந்துமதம் எனப்படும் சித்தர் நெறியே'

'மதமே மனிதனை விலங்கு நிலையிலிருந்து உயர்த்த வல்லது'
'மதமே மனிதகுல வரலாறு: அதுவே, அனைத்துக்கும் தாய்'
'கோயிலே மனித நாகரிகத்தின் தொட்டில்'
'வழிபாடே மனிதப் பண்பாட்டின் உயிர்நாடி'



'மந்திரமும் மருந்தும் மனிதனின் கண்கள்'
'என்னை யறிந்தால் உன்னை யறியலாம்'
'உன்னை யறிந்தால் முன்னை யறியலாம்'
'தன்னை யறிவும் அறிவே மெய்யறிவு'
'பின்னை யறிவு பேயறிவு' — சித்தர் நெறி

# பதினெண் சித்தர்களின் அறிவுக் கொடை

**பத்திக்கு வழித் துணைகள் :- (அ) மறைகள் நான்கு :—** இவை சித்தர்களின் விந்துவழி வாரிசுகளும் குருவழி வாரிசுகளும் மட்டுமே அறிதற்குரியன என்று மறைக்கப்பட்டன.

**(ஆ) முறைகள் நான்கு :-** 1. தொழுகை முறை 2. அழுகை முறை 3. எள்ளல் முறை 4. ஏசல் முறை.

**(இ) நெறிகள் நான்கு :-** 1 கும்பிடுதல் 2 பூசை செய்தல் 3 வழிபாடு செய்தல் 4 வேண்டுதல் செய்தல்.

**(ஈ) வேதங்கள் நான்கு :-** 1 இருடி வேதம் 2 அசுரவேதம் 3 சாம வேதம் 4 அதர் வான வேதம் [பிற்காலத்தில், ஆரியர்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டே 'ரிக்', 'யசுர்', 'சாம', 'அதர்வண' வேதங்களை வகுத்தனர்.]

**வழிபாட்டு நிலையங்கள் —** 1 ஆயிரத்தெட்டுச் சீவன் ஆலயங்கள் [ஆண் தன்மையுடைய உயிரணுக்களை வெளிப்படுத்தும் ஊற்றுக்கள் மீது அமைக்கப்பட்டவை] 2 இருநூற்று நாற்பத்து மூன்று சத்தி பீடங்கள் [பெண் தன்மையுடைய உயிரணுக்களை வெளிப்படுத்தும் ஊற்றுக்கள் மீது அமைக்கப்பட்டவை] 3 நூற்றெட்டுத் திருப்பதிகள் அலித்தன்மையுடைய உயிரணுக்களை வெளிப்படுத்தும் ஊற்றுக்கள் மீது அமைக்கப்பட்டவை]

**மண்ணுலகை ஆட்சி செய்பவை :-** விண்ணிலுள்ள இருபத்தேழு மீன்கள், பன்னிரண்டு இராசிகள், ஒன்பது கோள்கள் எனும் நாற்பத்தெட்டே பயிரினங்களையும் உயிரினங்களையும் ஆளுகின்றன.

**நோய் வகைகள் :** 'உயிர் நோய்', 'உடல் நோய்' எனுமிரண்டு பெரும் பிரிவுக்குரியவை. இவற்றிற்குத் தனித்தனி மருத்துவ முறைகள் உண்டு.

**மருந்து வகை :** நெருப்பின்றிச் செய்யப்படுபவை '**சித்தர் மருந்து**' நெருப்பைப் பயன்படுத்திச் செய்யப்படுபவை '**சித்த மருந்து**'

**அரிய மருந்துகள் :-** 1 பாதரசத்தைக் கட்டுதல், 2 பாதரசம், உலோகங்கள், உப்புகள், நவரத்தினங்கள், மூலங்கள் ..... முதலியவைகளைச் சாம்பலாக்குதல், 3 காய கல்பம், ககன குளிகை, அமிழ்து, வசிய மருந்து, மாறக மருந்து, உருவ மறைப்பு மருந்து, உருவத்தை அருவமாக்கும் மருந்து, அருவுருவ நிலைதரும் மருந்து, கூடுவிட்டுக் கூடு பாயும் மருந்து, நஞ்சுகளை முறிக்கும் மருந்து .. முதலியவைகளைத் தயாரித்தல்.

**மருந்துக்கு அப்பாற்பட்ட நோய்கள் :-** 1 பேய்க்கலை, 2 நோய்க்கலை, 3 தேய் கலை, 4 கண்ணேர், 5 சாபம், 6 ஊழ்வினை, 7 விதி, 8 கோள்மாற்றம் ... முதலியவற்றால் வரக்கூடிய நோய்கள்.

**பதினெண் சித்தர்களின் சீரிய மருத்துவமுறைகள் :—**

மணி = ஒளிக் கற்றைகள் [Light rays]
பலவகைப்பட்ட எண்ணெ விளக்குகளின் ஒளிகள்! உலோகங்கள். நவரத்தினங்கள் முதலியவைகளின் ஒளிகள், சூரிய ஒளி, நிலவின் ஒளி, ... முதலியவை,

2 மந்திரம் = ஒலி அலைகள் [Sound Waves]
பலவகைப்பட்ட இசைக்கருவிகளின் ஒலிகள்! உயிரினங்களின் ஒலிகள்; கடலலைகளின் ஒலிகள்—முதலியவை.

3 மருந்து = பொருள்கள் [Substances]
கல், மணல், மண், பயிரினம், உயிரினம், உலோக இனம், உப்பு இனம், மூல இனம் ... முதலியவை.

4 குறிப்பிட்ட தொழில் செய்பவர், கட்டிடங்களில் வாழ்பவர், உணவுவுண்பவர் ... குறிப்பிட்ட நோயையே பெறுவர் அதற்கு மணி மந்திர மருந்து மூன்றும் பயன்படுத்தப்படல் வேண்டும்



8 தனி மனிதர்கள் தங்களின் வாழ்க்கை பற்றியும்: செய்துவரும் தொழில் பற்றியும்; செய்யப் போகும் செயல் திட்டங்கள் பற்றியும்; வாழ்வியலில் உள்ள நலிவுகள, சிக்கல்கள், குறைகள் முதலியவைகள் பற்றியும் அறிந்து கொள்ள விரும்பினால்; அவர்களுக்கு 1 பிறடபியல் 2 இரேகை, 3 அங்கவியல், 4 எண்ணியல், 5 பெயரியல், 6 சரம், 7 முத்தக்குறி, 8 உடுக்கை, 9 வேள்வி, 10 மருள், 11 நீரோட்டம்,, 12 விரிச்சி, 13 கணிச்சி, 14 ஓச்சு, 15 மூறி, 16 மந்திறம், 17 மந்தரம், 18 எந்திறம் ஆகிய பதினெட்டு முறைகளிலும் தக்காரைக் கொண்டு தேவையான உதவிகளைச் செய்தல். [பயன் கணித்துக் கொடுக்கப் படும் ]

9 இல்லங்களில் பூசை செய்ய; தொழில் செய்யும் இடங்களில் வழிபாடு செய்ய; கோவில், ஆலயம், பாழி, பீடம், மடம், முதலிய வழிபாட்டு நிலையங்களில் நிறுவிடத் தேவையான சக்கரங்களைத் தயாரித்துத்தருதல்.

பதினெண் சித்தர்கள், இம்மண்ணுலகில் தரத்தாலும் திறத்தாலும் பிறப்பாலும் ஊழாலும், விதியாலும், முயற்சியாலும் பல்வேறு வகைப்பட்ட மனிதர்கள் என்றென்றும் இருந்திடுவார்கள் என்பதால்; அவரவர் உய்யும் பொருட்டுப் பலவகைப்பட்ட வழிப்பாட்டு நிலையங்களைப் படைத்தார்கள். அவற்றுள் குறிப்பிடத் தக்கவை:

1. அமளிகை 2 அம்பலம் 3 அரங்கம் 4 ஆலயம் 5 இருக்கை 6 ஈச்சுரம் 7 உண்டாட்டாம் 8 ஏட்டகம் 9 கந்தழி 10 களத்துமேடு 11 கற்றிளி 12 குடிசைக்கோயில் 13 கொடிநிலை 14 கோட்டம் 15 கோயில் 16 சபை 17 சத்திறம் (சத்தி திறம்) 18 சன்னிதானம் 19 சமாது 20 சாவடி 21 சோலை 22 தளி 23 தவச்சாலை 24 தானம் 25 திராவிடம் 26 திருப்பதி 27 திருவாடி 28 திருவோலக்கம் 29 தூங்கானை மாடம் 30 நகரம் 31 நாகரம் 32 நியமம் 33 பள்ளி 34 பலிபீடம் 35 பாழி 36 பீடம் 37 புற்று 38 பூங்கோயில் 39 பொதியில் 40 ஞானக்கொட்டடி 41 மன்றம் 42 மந்தை 43 மடம் 44 மண்தளி 46 விண்ணகரம் 46 விரிச்சிமோடை 47 வெறியாட்டுமோடை 48 வேசரம் 49 வேள்விக் கூடம் . முதலியவை.

10 செவ்வாய் வெள்ளி ஆகிய இரு நாட்களிலும் குழந்தைகளுக்கு மந்திரித்துப் பிணி போக்குதல்.

ஞாயிற்றுக் கிழமைகளில் பெரியவர்களுக்கு மந்திரித்துப் பிணி போக்குதல்,

பிறவற்றிற்கு அலுவலக நேரம் : மாலை 7 முதல் 8–30 மணி.

மேற்கண்ட செயல் திட்டங்களைச் செயலாக்கிடப் பதினென் சித்தர் சக்தி பீடம் வில்லிவாக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது. சனீசுவரர் அருவுருவ தேவாலயம் (ஞாயிற்றுக் கிழமைகளில் யாகம் நடைபெறும்) சித்தரடியான். கு திருநாவுக்கரசு, 5/62, பசனைக் கோயில் தெரு, தாதன் குப்பம் வில்லிவாக்கம், சென்னை – 49. ஆர்வமுள்ளவர்கள் செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி அருகிலுள்ள காரியேந்தல்பட்டியிலும் ; சென்னை வில்லிவாக்கம் தாதன் குப்பம், பசனைக் கோவில் தெருவிலும்

## மாதந்தோறும் முழுநிலவு நாளில் பருவ பூசை நடைபெறும். ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

### பதினெண் சித்தர்கள் உருவாக்கிய :

1 அங்கவியல் சாத்திரம் 2 இரேகை சாத்திரம். 3 ஊசிமுறி சாத்திரம். 4 எந்திர சாத்திலம். 5 எண்ணியல் சாத்திரம் 6 ஓக சாத்திரம். 7 கனவு சாத்திரம். 8 சகுன சாத்திரம். 9 சர சாத்திரம். 10 தொடுகுறி சாத்திரம். 11 பறவை சாத்திரம். 12 பல்லி சாத்திரம். 13 பிறப்பியல் சாத்திரம். 14 பெயரியல் சாத்திரம். 15 மனையடி சாத்திரம். 16 வாக்குக் கண்ட சாத்திரம் முதலியவற்றின் அடிப்படையில் மனித வாழ்வில் ஏற்படும் 1 அமைதியின்மை 2 ஈட்டமின்மை. 3 உரமின்மை. 4 ஊக்கமின்மை 5 ஒற்றுமையின்மை 6 பற்றின்மை 7 நிம்மதியின்மை. 8 நிறைவின்மை முதலிய வற்றை அகற்றிக் கொள்ள வழிவகைகள் கணித்துத் தரப்படும்.

## வேண்டுகோள் !

இந்நூலில் கூறப்பட்டுள்ள செய்திகளும், குறிக்கப் பட்டுள்ள காலக் கணக்கீடுகளும், பெயர்களும் நிகழ்ச்சிகளும் பன்னெடுங் காலமாக, பழங்கதைகளாக வழக்காற்றுச் செய்திகளாக, நாட்டுப் பாடல்களாக பரம்பரை இரகசியங்களாக, குருவழிச் செய்திகளாக .. நாட்டு வழக்கில் இருந்து வருபவைகளே ! எனவே காலப் போக்கில் இவற்றில் பல திரிபுகளும் மாற்றங்களும், கற்பனைகளும் சொந்த விருப்பு வெறுப்புகளுக்குரிய கருத்துக்களும் இடம் பெற்றிருக்கலாம்.



அவ்வப்போது அந்தந்த காலத்தின் நிகழ்ச்சிகளின் செல்வாக்குகளும், கருத்துக்களின் செல்வாக்குகளும் கூட இடம் பெற்றிருக்கலாம். எனவே எனக்குத் தெரிந்த செய்திகள் எல்லாம் அறிவுலகுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்ற நன் முயற்சியிலேயே எல்லாச் செய்திகளும் நூலாகத் தொகுக்கப் பட்டுள்ளன. அதனல் இந்நூலை பலரும் தங்களுடைய ஆராய்ச்சிக்குரிய கருவாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இது போல் பல்லாயிரக்கணக்கானச் செய்திகள் பல புத்தகங்களாகத் தொகுக்கப்பட்டு வெளிவருவதற்குத் தேவையான ஆதரவையும் ஆர்வத்தையும் தர வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேம். எனது துணிவின்மையாலோ, அச்சத்தினலோ, முயற்சியின்மையினலோ தயக்கத்தினலோ வரலாற்று மூலங்களாக உள்ள (Historical sources) செய்திகளும், வரலாற்றுச் சான்றுகளாகவும் ஊன்றுகளாகவும் (Proves and Evidences) உள்ள செய்திகளும் நூல் வடிவில் வெளிவராமல் போனல் அறிவுலகுக்கும் ஆராய்ச்சியுலகுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என்ற உயர்ந்த நோக்கத்துடனே இந்நூலும் வெளியிடப்படுகின்றன எனவே இந்நூலில் உள்ள கருத்துக்களும், செய்திகளும் ஏற்கனவே உள்ள கருத்துக்களையும் செய்திகளையும் மறுக்கவோ, மாற்றவோ, எதிர்க்கவோ மற்றவர்களை புண்படுத்தவோ வெளியிடப் படுபவையல்ல என்பதை மிகப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேம

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய கருவூரர் பற்றிய வரலாறு பல்வேறு வகைப்பட்ட கதைகளாக வழங்குகின்றன. பீடாதிபதி என்ற பூறையில் எங்களிடம் உள்ள செய்திகளை சுமார் 1000 பக்கங்களுக்கு மேல் தொகுத்து வைத்திருப்பது இனியும் வெளியுலகுக்கு தெரியப் படுத்தாமல் இருக்கக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் வெளிப்பாடே இச்சிறுநூல். “சித்தர் கருவூரரின் காலக் கணக்கீடு” என்ற தலைப்பில் உள்ள கட்டுரைகளும் ' அரச பாரம்பரியம் ' ' குரு பாரம்பரியம் ' இலக்கிய பாரம்பரியம் ' முதலிய காலக் கணக்கீட்டுக் குறிப்புகள் (The chronological datas ஆராய்ச்சித் துறையினருக்குத் துணைபுரியும் என்ற நம்பிக்கையிலே வெளியிடப் படுகின்றனவேத் தவிர ஏற்கனவே உள்ள கருத்துகளை மறுக்கவோ, குழப்பவோ வெளியிடப் படுபவையல்ல என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

## முடிவுரை

நற்றமிழர்களே!

உறங்கிக் கொண்டிருக்கும் தமிழகத்தை உண்மை வரலாற்றினை எடுத்துக் காட்டுவதன் மூலம் சிந்தனையின் பாதைக்கு அழைப்பதின் மூலமும் மீண்டும் சமயமும் மொழியும் சமுதாயமும் மறுமலர்ச்சியடையும் என்று நம்புகின்றோம். எண்ணற்ற ஏட்டுச் சுவடிகள், செப்பேடுகள், கல்வெட்டுகள் இன்னமும் மண்மூடியப் புதையல்களாக உள்ளதால் எது உண்மையான வரலாறு? என்பதை அறிவதில் குழப்பமும், கலக்கமும் அடைகின்றனர் வரலாற்று பேராசிரியர்களும் சிந்தனையாளர்களும், தொல்பொருள் துறையாளர்களும், ஆராய்ச்சிப் போக்கும், சிந்தனைப் போக்கும் விஞ்ஞானச் சாதனமும் குறைந்திருந்த நேரத்தில் எழுதி வைத்த வரலாற்றினடிப் படையிலே முன்னும் பின்னும் அமைத்து புதிய வரலாற்றுக் குறிப்புக்களை எழுதுகின்றனர். இந்நிலை நீங்கி நன்நிலையடையவே விழைகின்றோம்.

எண்ணமும் சிந்தையும் தமிழனின் வளத்திற்கும் நலத்திற்கும் என்னாலான அனைத்துப் பணியைச் செய்திடக் காத்துள்ளேன். உள்ளமும் உணர்வும் எப்பொழுதும் தமிழ் மொழியின் செழுமைக்கும் மலர்ச்சிக்கும் பாடுபடவே வாழுகின்றேன். தனியொரு மனிதனிடத்தே கலைகள் யாவும் குவிந்திருக்க வேண்டாம் என்பதால் என்னால் இயன்ற அளவு மாணாக்கர்களைத் தேடியலைந்து கற்றுத் தருகின்றேன். சித்தர்களின் பணியும், வரலாறும், இலக்கியமும் முழுமையாக வெளிவந்து மக்களின் சமுதாய வாழ்வில் மீண்டும் மலரும் போதுதான் உண்மையான சுக சக வாழ்வு கிட்டும்; இது உறுதி!

என்வே, என்னேடு யாவும் மறைந்திடாமல் பலரும் பயனடைய எனக்கு உதவிடுமாறு மாணவர்களையும் இளைஞர்களையும், தொழிலாளர்களையும், அலுவலர்களையும், அணிகளையும், அமைப்புக்களையும் ... .... என அனைத்துத் தரப்பினரையும் வேண்டுகின்றேன்.




வெளியீடு :- 1908

முதற் பதிப்புரிமை : கு. சத்தியமூர்த்தி B. Com.,
1/1851, கீரைக்கடை சந்து
தெற்கு வீதி, தஞ்சை - 613 001.

கிடைக்குமிடம் :- வீரமாகாளி சன்னிதானம்.

ஞெ சேவுகன்
C/O காதி வத்திராலயம்,
கொட்டாம்பட்டி - அஞ்சல்,
மேலூர் - தாலுக்கா,
மதுரை மாவட்டம் - 625 103.
சித்தர்
8, சண்முகம் தெரு
வரதராசபுரம். அம்பத்தூர்,
சென்னை - 600 053.


உரிமை :- முழுமையும் ஆசிரியர்க்கே.

---

## பதினெண் சித்தர் சித்தி பீடச் செயலாளர்கள் :

1 அருள்மிகு அங்காளப் பரமேச்சுவரி சன்னிதானம்
பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி
குருவாணை ஓலைநாயகம்.
திரு. சி. கவிக்குமார் B. Sc ,
56, என். ஜி ஓ. காலனி, பொன்னேரி. 601204.

2 அருள்மிகு சங்காத்தம்மன் சன்னிதானம்.
பன்னிரண்டாது பதினெண் சித்தர் பீடாதிபதி
துணைக் குருவாணை ஓலைநாயகம்.
திரு. மு. பெருமாள் B. Sc. பொன்னேரி.

3 அருள்மிகு தொம்பரத்தம்மன் சன்னிதானம்
பல்லவப் பெருமண்டலத்து குருவாணை ஓலைநாயகம்
திரு சு. வெங்கிடேசன் B. Sc., பொன்னேரி.

4 அருள்மிகு கருப்பழகி சன்னிதானம்
சோழ பெருமண்டலத்து குருவாணை ஓலைநாயகம்.
திரு. கு. சத்தியமூர்த்தி B. com. தஞ்சை.

5 அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம், பதினெண்
சித்தர் சிவசக்தி பீடம்

திரு மந்திர ஓலைநாயகம்.
திரு. செ. சேவுகன், காரியேந்தல்பட்டி மதுரை
மாவட்டம்.

6 அருள்மிகு பவானியம்மன் சன்னிதானம்
திரிபுர சுந்தரி சன்னிதான மருளாடு நாயகம்
திரு. கு திருநாவுக்கரசு வில்லிவாக்கம், சென்னை.

7 அருள்மிகு நாகதேவி சன்னிதானம்
திரு மா இராமன் B A.,
பரதேசிக்கவுண்டன்பட்டி, திண்டுக்கல் வட்டம்

8 அருள்மிகு திருவப்பூர் மாரியம்மன் சன்னிதானம்,
திரு. வே. இராமதாசு.
புதுக்கோட்டை.

*With the best compliments from :*

**Grams ; GAJAM** PHONE : **401**

# GAJARAJ & COMPANY

*3329, Nanjikottai Road,*

THANJAVUR-6.

**(Structural Fabricators and Small Scale Industrialists)**

**(A GOVT. APPROVED WORKSHOP FOR MAJOR REPAIRS)**

*Distributor for :*

HINDUSTAN TRACTORS

ELEPHANT BRAND FOUR WHEEL TRAILER

*All kinds of*

Agricultural Implements, Farm Mechinery, ADV Carts
Rubbish carts Sewage carts and Wheel Burrows

*The products are Manufactured to the*

BEST QUALITY, DURABILITY, and EFFICIENCY

***WE WELCOME ALL.***